பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 16 சனிக்கிழமை (01.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 338

# ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு

# தமிழகத்தில் கடை அடைப்பு

## சகல பகுதிகளிலும் சந்தைகள், கடைகள் வெறிச்சோடின


வெறிச்சோடிக் கிடக்கும் சந்தை

சென்னை, நவம்பர் 01

இலங்கைத் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தக் கோரி தமிழ் நாடு வணிகர் சங்கங்களின் சார்பில் தமிழகம் முழுவதும் நேற்றுக் கடை அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சென்னை உட்பட அனைத்து நகரங்களிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன. மளிகைக் கடைகள், தேநீர்க்கடைகள், காய்கறிக்கடைகள், சிறப்பு அங்காடிகள், ஜவுளிக் கடைகள் உட்படச் சகல வர்த்தக நிறுவனங்களும் முழுமையாக அடைக்கப்பட்டன. (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் உறவுகளுக்காக நடிகர்கள் இன்று உண்ணாவிரதம்

சென்னை, நவ.1

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங் கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தென்னிந்திய நடிகர், நடிகைகள் இன்று காலை தமிழ்நாட்டில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனர்.

சென்னையில் உள்ள நடிகர் சங்க வளா கத்தில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள பந் தல்களில் அமர்ந்து காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடிகர், நடிகைகள் உண் ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் ஷெல் வீச்சில் மருத்துவப் பணியாளர் காயம்

கிளிநொச்சி, நவ. 01

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதிமீது வியாழக்கிழமை நண்பகல் இரா ணுவத்தினர் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் மருத்துவப் பணியாளர் ஒரு வர் படுகாயமடைந்தார் என்று தகவல்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர் மருதங்கேணி வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

கிளிநொச்சிப் பிராந்திய சுகாதாரப் பணி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரம் மீது இராணும் நேற்று தொடர்ச்சியாகச் ஷெல் மழை; மத்திய கல்லூரி சேதம்

கிளிநொச்சி, நவ.1

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி நகரப் பகுதிமீது இராணுவத்தினர் முன்னரங்க நிலைக ளில் உள்ள ஆட்லறித்தளங்களில் இருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல் நடத்துகின்றனர். இந்தக் கண்மூடித்தனமான ஷெல் வீச்சின்போது கிளிநொச்சி பிரதான வைத்தியசாலை யும் அதிர்ந்தது. வைத்தியசாலை வளாகத்துக்குள்ளேயும் நேற்று நண்பகல் இரு ஷெல்கள் வீழ்ந்தன. அதனால் அங்கு பதற்றம் நிலவியது.

நேற்றுக்காலை 7.30 மணிமுதல் மாலை வரை இராணு வத்தினர் தொடர்ச்சியாக ஷெல் மழை பொழிந்தனர். இதனால் கிளிநொச்சி நகரமே வெறிச்சோடி மயானம் போன்று காட் சியளித்தது.

இதேவேளை நேற்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையானின் வாகன அணி லொறியுடன் மோதி விபத்து!

### எனினும் அவருக்குப் பாதிப்பு இல்லை

கொழும்பு, நவ. 01

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தன் (பிள்ளையான்) பயணம் செய்த வாகனத் தொடரணி நேற்றுக்காலை 6.20 மணியளவில் குருநாகல் - கோக ரேல்ல வீதியில் விபத்துக்குள்ளாகியது. எனினும், விபத்தில் முதலமைச்சருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

நான்கு வாகனங்கள் கொண்ட (16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நலன்புரி நிலையத்தில் நேற்று அதிகாலை படையினர் தேடுதல்

### தமிழர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டனர்

திருகோணமலை, நவ. 01

திருகோணமலை கலாசார மண்டபத் தில் அமைந்துள்ள நலன்புரி நிலையம் நேற்று அதிகாலை 6 மணிக்கு சுற்றி வளைக் கப்பட்டுத், தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின்போது தமிழர்கள் ஏழு பேர் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

கடற்படையினரும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்ட இத் தேடுதலில் சகலரும் முகமூடி நபர் முன்னால் நிறுத் தப்பட்டனர். அங்கு தங்கியுள்ள அகதிக ளின் பொதிகள், ஆவணங்கள் சோத

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் தளபதி சூசையின் மறைவிடம் மீது விமானங்கள் தாக்கினவாம்

### பாதுகாப்பு அமைச்சு சொல்கிறது

கொழும்பு, நவ.1

கிளிநொச்சி, ஜெயந்திநகரில் கடற் புலிகளின் தளபதி சூசையின் மறைவிடம் மீது நேற்றுப் பிற்பகல் 2.25 மணிக்கு 'ஜெற்' விமானங்கள் வெற்றிகரமான தாக்கு தலை நடத்தியுள்ளன.

பாதுகாப்பு அமைச்சு ஊடகத் தகவல் நிலையம் மேற்கண்டவாறு நேற்றிரவு அறிவித்தது.

களமுனையில் உள்ள தரைப் படை யினர் வழங்கிய அச்சொட்டான தகவலின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே → க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்-1

## புலிகள் வைத்திருப்பவை பூச்சிநாசனி விசிறும் விமானங்களே; அவற்றை அழிக்க தந்திரோபாயங்களை அரசு கையாள்கிறது

### அமைச்சரவைப் பேச்சாளர் பிரியதர்சன யாப்பா



கொழும்பு, நவ.1

விடுதலைப் புலிகள் வைத்திருப்பவை பூச்சிநாசனி விசுறுவதற்குப் பயன்படுத் தும் சிறிய ரக விமானங்களே. அவற்றில் ஒன்றை எமது படையினர் ஏற்கனவே தாக்கி அழித்துவிட்டனர். எஞ்சியிருப்பவற்றை அழிப்பதற்கும் தந்திரோபாயங்களைக் கையாளுகின்றோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச் சாளருமானஅனுர பிரியதர்சன யாப்பா.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் மேற்கண்ட வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் கடந்த செவ் வாய்க்கிழமை நடத்திய விமானத் தாக் குதல்குறித்து செய்தியாளர்கள் அமைச் சரிடம் குடைந்து குடைந்து கேள்விக ளைக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

மன்னாரில் தாக்குதல் நடத்திய புலி களின் விமானங்கள் சுமார் ஒன்றரை மணித் தியாலமாக வானில் பறந்தது மட்டுமல் லாது சுமார் 300 கிலோ மீற்றர் தூரம் பறந்து கொழும்பிற்குள்ளும் வந்துள்ளது. அனு ராதபுர விமானத்தளத்தின் மீது தாக்குதல் நடத்திய புலிகளின் விமானங்களை ஒரு சில வினாடிக்குள் தாக்கி அழித்ததாகக் கூறப்பட்டது. அப்படியாயின் செவ்வா யன்று சுமார் 90 நிமிடங்கள் வானில் இருந்த புலிகளின் விமானங்களை ஏன் அழிக்க முடியவில்லை? இது தொடர்பில் அமைச்சரவையில் ஏதும் பேசப்பட்டதா? என்று செய்தியாளர் கள் எழுப்பிய கேள் விக்கே அவர் மேற் கண்டவாறு பதில ளித்தார்.

புலிகளினால் பயன்படுத்தப்படுகின்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அருள்முருகன் திருமணப் பணியகம்

உங்கள் உறவுகளின் ஜாதகம், விவரங்கள் விரும்பின் படங்களையும் வழங்கி வையுங்கள். இவர்களுக்கு தற்பொழுது இங்குள்ள மணமக்களிலோ தொடர்ந்து வருகின்ற மணமக்களிலோ பொருத்தமான மணமக்களுக்கான வாய்ப்புகள் சாத்தியமாகலாம். இயன்றவரை முன்னறிவித்தலுடன் வருவது உங்களுக்கு வசதியாகவிருக்கும்.

T.P:2229334 இல: 03.யாழ் வீதி, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோவில் மற்றும் ஆனைப்பந்தி சந்தி சமீபம்)



## நாகம்ஸ் சினிமாவில்

தற்போது விஷால் - நயன்தார நடித்த

"சத்யம்"

காலை 10.30

பி.ப. 2.30

இரண்டு காட்சிகள்



## கோழிக்குஞ்சு விநியோகம்

Bahira புறொயிலர் குஞ்சுகள், 01.11.2008 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீன்,

நவாலி வீதி,

ஆனைக்கோட்டை.



## காணி விற்பனைக்குண்டு

மூளாய்- மாவடி வீதியில் 12 பரப்பு விஸ்தீரணமான காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0776534283



நலிவுற்ற மக்களின் மேம்பாட்டு நிதிக்காக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின்

## கரம் கொடுக்கும் கலை விழா

காலம் : நாளை (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி

இடம் : கலைத்தூது கலையகம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பாரம்பரிய கலைகளின் பாதையில்

கலை நிகழ்வுகளாக....

- வரவேற்பு நடனம்
- கிராமிய நடனம்
- வசந்தன் ஆட்டம்
- நாடகங்கள்
- சங்கிலியன் நாட்டுக்கூத்து

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்

'நலிவுற்றோருக்காக இணைந்தே கரம் கொடுப்போம்'

Lions Club of Manipay Circle.

(சி/555163)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26.08.1926



மறைவு: 14.11.2007

## அமரர் சின்னப்பொடி அருமைநாயகம்

திதி:திருதியை (01.11.2008)

பாசத்துடன் எம்மை பல்கலையும் பயிலவைத்து
பாரினில் நாம் சிறக்கப் பாடுபட்ட தெய்வமே!
பாதியில் எம்மைப் பரிதவிக்க வைத்துவிட்டு
ஆண்டு ஒன்று பறந்தோடி விட்டதய்யா
கந்தன் திருவடியில் அமைதியாய் நீங்கள் வாழ
ஆண்டாண்டாய் உங்கள் நினைவுடனே பிரார்த்திப்போம்.

கடந்த 14.11.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு நிகழ்வுகள் இன்று (01.11.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல.70, கடற்கரை வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன் [illegible]
மருமக்கள், [illegible]

## கூடைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகம் 'எக்ஸ்போ ஏயர்' மற்றும் சண்முகம் சைவ உணவகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திவரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

* பெண்கள் பிரிவு - உடுவில் மகளிர் கல்லூரி எதிர் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை.
* றோட்டறக் பிரிவு - யாழ்ப்பாணம் றோட்டறக் கழகம் எதிர் யாழ். நகர்மைய றோட்டறக் கழகம்.
* ஆண்கள் பிரிவு - யாழ். மத்திய கல்லூரி எதிர் புனித பரியோவான் கல்லூரி.

காலை8மணிக்கு இடம்பெறும் 3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் புனித பத்திரிசியார் கல்லூரியும் யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவிருக்கின்றன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக றோட்டறிக் கழகத் தலைவர் கே.பாலசுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினராக 'எக்ஸ்போ ஏயர்' நிறுவன முகாமையாளர் கே.வசீகரனும், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசாவும் கலந்து கொள்வர். (1)

## யாழ்.பல்கலையில் நாடக நிகழ்ச்சி

மஹாகவி காளிதாஸின் 'அபிஞ்ஞான சாகுந்தலம்' நாடக நிகழ்ச்சி இன்று காலை 10 மணி முதல் 12 மணி வரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

திருமதி நவதர்ஷனி கருணாகரனின் நெறியாள்கையில், பல்கலைக் கழக நுண்கலைத் துறை நாடகமும் அரங்கக் கலைகளும் பிரிவு இந்த நாடகத்தை தயாரித்துள்ளது.

(1)

## விளக்கமறியல்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கசிப்பு வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மதுவரித் திணைக் களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்திய திடீர்ப் பரிசோதனைகளின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.


## யாழ். மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

★ (இந்தியா, U.K, U.S.A, சைப்பிரஸ் ஆகிய நாடுகளில்) தொழிற்பயிற்சியுடன் கூடிய உயர்கல்வியை பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் பெறுவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு இலவசமாக நடைபெறவுள்ளது.

இடம் : யாழ்.மத்திய கல்லூரி

காலம் : இன்று.01.11.2008(சனிக்கிழமை) காலை 10.00 மணி

கற்கை நெறிகள் தொடர்பான சகல விவரங்களுடன் அனுமதிக்கான வழிகாட்டல்களும் அங்கீகரிக்கப்பட்ட அனுபவமுள்ள ஆலோசகரினால் வழங்கப்படும். பங்கு பற்றுவோர் பெற்றோருடன் சமுகமளிப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு:- 071 6419050
011 2506811

(79583)


# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சுந்தரகாந்தா (மல்லி)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா சுந்தரகாந்தா (மல்லி) நேற்று (31.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா தம்பிராசா (ஓய்வூதியர்)வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற E.S.S.அருணாசலம் (அப்புத்துரை) - மதுரம்மா தம்பதியினரின் மகளும், திருமதி மகேஸ்வரி (சின்னம்மா)யின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற மகாதேவா, பபா, காலஞ்சென்ற பேபி, வாமதேவன் (வாமாஸ்), ரஞ்சி, S.A.பாலச்சந்திரன், கிச்சி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, வள்ளியம்மை, சிவபாக்கியம், தம்பித்துரை மற்றும் நல்லம்மா தியாகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2008) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சி.தம்பிராசா (கணவர்).

## திருமதி தங்கராசா பரமேஸ்வரி



சித்தம்பாதி, கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா பரமேஸ்வரி நேற்று (31.10.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசாவின் அன்பு மனைவியும், நாகராசா (ரவி), யோகராசா (ஜேர்மன்), நாகநந்தினி (சுவிஸ்), மாதினி ஆகியோரின் தாயும், கந்தையா (சுவிஸ்), ஜெயக்குமார், ரதி, ஜெனா ஆகியோரின் மாமியும், சஞ்ஜீவன் (பிரான்ஸ்), நிரோஜன் (சுவிஸ்), ரஜீவன், சஜீவன், ரதுஷன், ரொசாயினி, பிருந்தாபன் (ஜேர்மன்), பிரவின் (ஜேர்மன்), கெவின் (ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியும், வல்லிபுரம், ஆறுமுகம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெல்லன்கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தம்பாதி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல:
குடும்பத்தினர்.

## பிரம்மஸ்ரீ கிருஸ்ணசாமிஐயர் கைலாசநாதக்குருக்கள்

(பிரதம குரு, சங்கானை மகாதேவப்பிள்ளையார் தேவஸ்தானம்)



பிள்ளையார்கோவிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமிஐயர் கைலாசநாதக்குருக்கள் நேற்று (31.10.2008) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கிருஸ்ணசாமிஐயர் - தர்மாம்பாள் தம்பதியினரின் அன்புப் புதல்வனும், பவானி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஸ்ணசாமிக்குருக்கள் மற்றும் சுந்தராம்பாள் (கனடா), நாகலட்சுமி (சிலாபம்), சந்தானலட்சுமி (மலேசியா), பாலகிருஸ்ணக்குருக்கள் (கனடா), சர்வேஸ்வரி, காலஞ்சென்ற கணேசசர்மாக்குருக்கள் ஆகியோரின் சகோதரனும் கிருஸ்ணமோகன்குருக்கள் (ஜேர்மனி), கிருஸ்ணஜெயந்தி, கிருஸ்ணகுமார்க்குருக்கள் (சங்கானை மகாதேவ பிள்ளையார் தேவஸ்தானம்), கிருஸ்ணப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜேஸ்வரி (ஜேர்மனி), பாலகுமாரக்குருக்கள், துஷ்சந்தினி, வாகீசக்குருக்கள் (கனடா) ஆகியோரின் மாமனாரும் தன்வந்திரனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
சங்கானை.

தகவல்:
கிருஸ்ணகுமார்க்குருக்கள் (மகன்)
சங்கானை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# முதல்வர் கருணாநிதியின் காரணம் புரியாத 'பல்டி'!

ஈழத்தில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான கொடூர யுத்தத்துக்கு முடிவு கட்டுவது என்ற வீறாப்போடு - தமிழக மாநில அரசின் முன்னேற்பாட்டில் - ஆரவாரமாக முன்னெடுக்கப்பட்ட - 'பதவி விலகல்' பற்றிய எச்சரிக்கைப் போராட்டம் தமிழக முதல்வரின் 'குத்துக்கரண' நடவடிக்கையால் செயலிழந்து அடங்கிப் போய்விட்டது.

மத்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஊடாக இலங்கை வழங்கிய உறுதி மொழியை நம்பித் தமது போராட்டத்தை ஒத்திவைத்துப் பெரும் தவறிழைத்து விட்டார் தமிழக முதல்வர் கலைஞர்.

இவ்விடயத்தில் தமிழக முதல்வரின் பணி எத்தகையது என்பதை தமிழகத்தின் தேசிய முற்போக்குத் திராவிடர் கழகத் தலைவர் விஜயகாந்த் குறிப்பிட்டிருக்கின்றார்.

*''கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நடந்துகொண்ட விதத்தை நாம் பாராட்டுவதை விட, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெகுவாகப் பாராட்டியுள்ளார். கருணாநிதி முதிர்ந்த அரசியல்வாதி என்றும், இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், தமிழர் பிரச்சினைக்கும் தீர்வு காணப் பாடுபடுகின்றார் என்றும், மத்திய அரசின் இணக்கத்தோடு தங்கள் நாட்டிற்கு அவர் வரவேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதி கூறியிருக்கின்றார். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நற்சான்றிதழ் பெறும் அளவுக்கு கருணாநிதி செயற்பட்டிருப்பதால், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர் எத்தகைய மகத்தான பணியை ஆற்றியிருக்கின்றார் என்பதை மக்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியும்.''* - இவ்வாறு தமிழக முதல்வரை 'உயர்வு நவிழ்ச்சி' மூலம் நையாண்டி பண்ணியிருக்கின்றார் விஜயகாந்த்.

'ஈழத் தமிழர் தாயகம் மீதான தனது யுத்த நடவடிக்கைகள் மூலம் அப்பாவித் தமிழர்களை இலங்கை அரசு கொன்று குவித்து வருவதால் இந்திய மத்திய அரசு அடுத்த இரண்டு வார காலத்துக்குள் இலங்கை அரசை யுத்தத்தை நிறுத்தச் செய்ய வேண்டும். இல்லையேல் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வார்கள்' - என்று மிரட்டிய தமிழக முதல்வர், பின்னர் அந்த அறிவிப்பிலிருந்து 'பல்டி' அடித்துவிட்டார்.

தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அதன் முடிவாக 'இராஜிநாமா எச்சரிக்கையை' பிரகடனப்படுத்திய கலைஞர், 'இராஜிநாமா எச்சரிக்கை வாபஸ் நாடகத்தை' மட்டும் தம்பாட்டில் முன்னெடுத்திருக்கின்றார். தமது அந்த முடிவுக்கான சரியான காரணத்தை இன்னும் தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அவர் விளக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இராஜிநாமா எச்சரிக்கை அறிவிப்பை தமிழக முதல்வர் வெளியிட்ட சமயம் ஈழத் தமிழர் பிரதேசத்தில் நிலைவரம் எவ்வாறு இருந்ததோ அதை விடவும் மோசமான கட்டத்தை நோக்கி இப்போது நிலைமை சென்று கொண்டிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் கூட வன்னியில் மக்கள் குடியிருப்புகள் மீது வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக் கின்றன. இதில் பாடசாலை மாணவர் ஒருவர் பரிதாபமாகப் பலியாகியிருக்கின்றார். பாடசாலை மாணவி ஒருவர், மூன்று மாத சிசு ஒன்று உட்பட எட்டுப்பேர் வரை காய மடைந்திருக்கின்றனர். பத்து வீடுகள் வரை அழிந்திருக்கின்றன.

புலிகளுடனான யுத்தம் என்ற பெயரில் விமான, பீரங்கித் தாக்குதல்கள் அனைத்துமே மக்களின் இலக்குகள் மீதே நடத்தப்படுகின்றன எனப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

'ஏமாறாதே, ஏமாற்றாதே!' என்ற தலைப்பில் தமிழக நாளேடான 'தினமணி' தீட்டிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களும் இங்கு கவனிக்கத்தக்கவை.

ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டி கொழும்பு அரசு கடந்த மூன்று தசாப்த காலமாக வழங்கி, ஏமாற்றி வந்த வக்குறுதிகளைப் பட்டியலிட்ட அந்தப் பத்திரிகை, ''இலங்கை அரசின் வாய்மூல வாக்குறுதிகளை நம்பி அவற்றின் மீது இந்திய அரசும், தமிழ்நாடு முதல்வரும் நம்பிக்கை கொண்டிருப்பது புரியாத புதிராகவே உள்ளது'' - என்று தெரிவித்திருக்கின்றது.

அது மாத்திரம் அல்ல. இவ்விடயத்தில் தமிழக முதல்வரின் செயற்பாடு 'விசித்திரமாக இருக்கிறது', 'ஆச்சரியம் தருகிறது', 'புரியாமல் இருக்கிறது', 'சிரிப்பை வரவழைக்கிறது' என்றெல்லாம் ஒவ்வொரு விடயத்தையும் புட்டுப் புட்டுக் காட்டி, சுட்டியிருக்கின்றது அந்தப் பத்திரிகை.

இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் 'ஏன் தயங்குகிறார்?', 'பல விடயங்கள் அவருக்கு ஏன் தெரியாமல் போய் விட்டன?' என்றும் அந்தப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றது.

'இலங்கை அரசின் உதட்டளவு உத்தரவாதத்தை நம்புவது சரியான இராஜதந்திரம் அல்ல' என்று இந்திய மத்திய அரசுக்கும் முதல்வர் கருணாநிதிக்கும் திட்டவட்டமான ஆலோசனை ஒன்றையும் முன்வைத்திருக்கிறது அந்தப் பத்திரிகை.

இவை அனைத்துமே கனகச்சிதமாகச் சரியானவையே.

ஆனால், முதல்வர் கருணாநிதியின் திடீர் 'குத்துக் கரணத்துக்கு' உதட்டளவு உத்தரவாதத்தை அப்படியே நம்பும் பத்தாம் பசலித்தன இராஜதந்திரம் மட்டும் காரணம் என்று நாம் நம்பவில்லை.

வழமைபோல அரசியல் நடிப்புக் கூத்தாடிகளின் சுயநல அரசியல் லாபங்கள் பற்றிய எண்ணமே இதன் பின்னணியாக - முக்கிய காரணமாக - இருக்கக்கூடும்; இருக்கமுடியும்.

# சுன்னாகம் எரிபொருள் நிலையத்தில் பட்டப்பகல் வேளையில் கொள்ளை!

யாழ்ப்பாணம், நவ.01

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பட்டப் பகல் நேரம் துணிகரக்கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத ஆயுத தாரிகளே இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டுப் பெற்றோல் கேட்டனர். தொடர்ந்து ஒயில் தருமாறு கேட்டுக்கொண்டு நிலைய அலுவலகத்தினுள் நுழைந்த கொள்ளையர் ஆயுத முனையில் முகாமையாளரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த பணத்தை கொள்ளையிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 2லட்சத்து 75ஆயிரம் ரூபா பணத்தை அங்கிருந்து அவர்கள்கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (203–86-38)

# நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் மழையின்மையால் பலத்த ஏமாற்றம்!

வலி. வடக்கு நவ.01

குடாநாட்டில் மழையை நம்பி நெல் விதைப்பில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகள் மழை இன்மையால் பலத்த ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான ஹெக்ரர் நிலப்பரப்பில் கடந்த மாதம் பெய்த மழையைத் தொடர்ந்து நெற்செய்கையாளர்கள் நெல் விதைப்பு மற்றும் நாற்று நடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்

தற்போது மழை பெய்வது நின்று கடும் வெப்பம் நிலவி வருகின்றது.

இந்த வரட்சியால் நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். விதைக்கப்பட்டுள்ள நெல் மணிகள் வெப்பம் காரணமாக அவியும் நிலையில் உள்ளதுடன் நாற்றுகளும் வாடும் நிலையில் உள்ளன.

ஒரு சில இடங்களில் உள்ள விவசாயிகள் வயல் காணிகளில் காணப்படும் கிணறுகள் மூலம் பயிர்களுக்கு நீர் இறைக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றார்கள்.

எனினும் கிணற்று நீர் போதியதாக இல்லையென்று சுட்டிக்காட்டப்படுகின்றது. கிணற்று வசதிகள் இல்லாத விவசாயிகள் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் உள்ளனர். (203–86)

# நூலக விழிப்புணர்வு நிறுவனம் நடத்தும் போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், நவ.1

பாடசாலை மாணவர்களிடையே நூலக விழிப்புணர்வு நிறுவகம் நடத்தும் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

போட்டிகள் நடைபெறவுள்ள மண்டபங்களின் விவரங்கள் அறிவிக்கப்படவுள்ளன.

நல்லூர் கோட்ட மாணவர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாணக் கோட்ட மாணவர்களுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறும்.

உடுவில் கோட்ட மாணவர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும், சண்டிலிப்பாய் கோட்ட மாணவர்களுக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும், சங்கானைக் கோட்ட மாணவர்களுக்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும், தெல்லிப்பளைக் கோட்ட மாணவர்களுக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் போட்டிகள் நடைபெறும்.

ஊர்காவற்றுறைக் கோட்ட மாணவர்களுக்கு புனித அந்தோனியார் கல்லூரியிலும், வேலணைக் கோட்ட மாணவர்களுக்கு வேலணை சரஸ்வதி வித்தயாலயாசாலையிலும், நெடுந்தீவுக் கோட்ட மாணவர்களுக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் போட்டிகள் நடைபெறும்.

சாவகச்சேரி கோட்ட மாணவர்களுக்கு மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் வடமராட்சி மற்றும் பருத்தித்துறைக் கோட்ட மாணவருக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும் போட்டிகள் நடைபெறும். சாவகச்சேரி கோட்ட மட்ட பேச்சுப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மட்டும் இடம்பெறும் எனவும் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிக்கான முடிவுதிகதி எதிர்வரும் 30 ஆம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மாவட்டத்தில் நிலவும் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதவிக்கு பட்டதாரிகளே சேர்க்கப்படவிருப்பதால் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் செயலகத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1 – 202)

## கரம்கோர்க்கும் கலைவிழா

நலிவுற்ற மக்களின் மேம்பாட்டு நிதிக்காக மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களின் 'கரம் கொடுக்கும் கலைவிழா' நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது. (203)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 17 | 02.11.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.ப. 11.51 வரை |
| நட்சத்திரம் : | மூலம் முழுவதும் |
| சுபநேரம் : | 9.04 - 10.34 |
| இராகுகாலம் : | 4.34 - 6.04 |

# புகையிலைச் செய்கை வடமராட்சியில் மும்முரம்

வடமராட்சி, நவ.1

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையை அடுத்து தோட்டங்களைப் பண்படுத்திய விவசாயிகள் புகையிலை நடுகையை ஆரம்பித்துள்ளனர்.

இதற்குப் புலோலி, பொலிகண்டி போன்ற இடங்களில் உள்ள நாற்று மேடைகளில் இருந்து பெருமளவான நாற்றுக்களை விவசாயிகள் பெற்று வருகின்றனர். இதனால் நாற்று மேடையாளர்கள் பெரும் நன்மை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-236)

# ஏ.ஜே. கனகரத்தினவின் நினைவு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், நவ.01

ஏ.ஜே.கனகரத்தினவின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவழி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வண. ஜெயசீலன் அடிகளார் நினைவுரை நிகழ்த்துவார். (203)

# பி.ஏ.அருமைநாயகத்திற்கு சேவைநலன் பாராட்டுவிழா

வடமராட்சி, நவ.1

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் பி.ஏ.அருமைநாயகத்தின் சேவை நலன் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், வங்கியின் ஓய்வுபெற்ற உதவிப்பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

இலங்கை வங்கியின் வெளிக்கள ஊழியர்களும், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (203-236)

# வாசகர் திருமுகம்

## சிறிய ரக 'பற்றரி'கள் விற்பனையில் என்ன நிகழ்கின்றது?

*எமது வீட்டிலுள்ள சுவர்க் கடிகாரம் திடீரென செயலற்றுப் போனது. கழற்றிப் பார்த்தபோது அதில் உபயோகத்திலிருந்த 'பற்றரி' செயலிழந்துள்ளமை தெரிவந்தது. இதற்குப் பொருத்துவதற்காக பற்றரி தேடியலைந்தேன். கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. நடை பாதைகளில் விற்கப்படும் பற்றரிகள் சில நாள்களிலேயே தமது ஆயுளை விட்ட அனுபவத்தால், நிரந்தரக் கடைகளில் இதனைத் தேடியலைந்தேன். இறுதியில் ஒரு கடையில் இருக்கக் கண்டேன். விலையைக் கேட்டபோது தலை சுற்றியது. ஒரேயொரு சிறிய பற்றரி 125 ரூபா எனக் கடைக்காரர் சொன்னார். அதற்குக் காரணமும் காதில் இரகசியமாகக் கூறினார். இதனைக் கேட்டதும் சுற்றிய தலை கிடுகிடுவென ஆடத்தொடங்கியது. இப்படியுமொரு வியாபாரம் நடைபெறுகின்றதா? இது என்ன அநியாயம்; யாரிடம் போய் முறையிடுவது? வேலியே பயிரை மேய்ந்தால் யாரென்ன செய்ய முடியும். எமது தலை விதி இதுதானென நொந்துகொண்டு பற்றரி வாங்கிச்சென்றேன்.*

*ஏன் ஐயா, உயர் பதவியில் உள்ளவர்களே! இந்த விடயம் உங்களுக்குத் தெரியாதா? அல்லது தெரியாதது மாதிரி தூங்குகின்றீர்களா? கோதுமை மாவிலிருந்து சவர்க்காரம்வரை பத்திரிகைகளில் எழுதினால்தான் நீங்கள் விழித்துக்கொள்வீர்களா?*

*நாங்கள் எமது வீட்டிலுள்ள கடிகாரம் முதல் 'ரிமோட்' வரை சிறியரக மின் பொருள்களுக்குப் பொருத்துவதற்கு இந்த அநியாய விலையில் பற்றிரி வாங்க முடியுமா?*

*தயவு செய்து இதனையும் உங்கள் பட்டியலில் சேர்த்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையைப் பொறுத்து விநியோகம் செய்தால் உதவியாக இருக்கும். இது எனது தாழ்மையான வேண்டுகோள். ஏற்றுக்கொள்வதும் இயலாது என்று விடுவதும் உங்கள் இஷ்டம்.*

*ஆனால் ருசிகண்ட பூனைகள் தமது நடவடிக்கையை நிறுத்துமா என்பது கேள்விக்குரியதே!*

அச்சுவேலி ஒன்பதாமவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபா மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா உடனடியாக நீக்கவேண்டும்

## ஐ.நா.பொதுச்சபையில் தீர்மானம்

நியூயோர்க்,நவ.01

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார, வர்த்தகநிதித் தடையை விலக்கிக் கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை கியூபா வெளியுறவுத் துறை அமைச்சர் பிலிப் பெரஸ் ரோக் புதன் கிழமை ஐ.நா பொதுச் சபையில் கொண்டு வந்தார்.

இதற்கு ஆதரவாக 185 நாடுகள் வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல், பாலௌ ஆகியவை எதிர்த்து வாக்களித்தன. மைக்ரோநேசியா, மார்ஷல் தீவுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

கியூபா மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்க வேண்டும் என தொடர்ந்து 17 ஆவது ஆண்டாக ஐ.நா பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த 16 ஆண்டுகளும் இத்தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

பொருளாதாரத் தடை சட்டம் விரோதமானது எனவும், நியாயமற்றது எனவும் பிலிப் பெரஸ் ரோக் கூறினார். சபையில் பேசிய அமெரிக்கப் பிரதிநிதி ரொனால்ட் கொடார்ட், "உணவு மற்றும் மனிதாபிமான உதவிகளைச் செய்யக்கூடியதாகவே பொருளாதாரத் தடை வகுக்கப்பட்டுள்ளது. பொருளதார உதவியை அந்நாட்டில் உள்ள சர்வாதிகார ஆட்சி தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காகவே தடை விதிக்கப்பட்டுள்ளது" என்றார்.

கியூபா மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்கா விலக்கிக் கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதிநிதி ராஜீவ் சுக்லா கோரிக்கை விடுத்தார்.

தடையால் கியூபா மக்கள் மருத்துவ உதவி பெறுவது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. உலகின் கருத்துக்கு அமெரிக்கா மதிப்பளிக்க வேண்டும். தடை காரணமாக ஐ.நா சபை மேற்கொள்ளும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் கூட பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

மைக்ரோனேசியா, மார்ஷல் தீவுகள் ஆகியவை நடுநிலை வகித்தன. கடந்த ஆண்டு 184 வாக்குகள் பெற்று இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கியூபா மீதான தடையை நீக்க அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களான ஒபாமாவும், மெக்கைனும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. மெக்கைன், கியூபா மீதான தடையை மேலும் இறுக்கமாக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.

# நேபாளம்-இந்திய பேச்சு நேற்று டில்லியில் ஆரம்பம்

காத்மண்டு,நவ.01

நேபாளத்துக்கும் இந்தியாவுக்குமிடையிலான உள்த்துறை செயலர்கள் மட்டத்திலான இரண்டு நாள் பேச்சுகள் டில்லியில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின.

இந்தப் பேச்சுகளில் பாதுகாப்பு, எல்லை நிர்வாகம், பயங்கரவாதம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

இந்தியா சார்பில் உள்துறைச் செயலர் மதுக்கர் குப்தா தலைமையிலான குழுவினரும், நேபாளம் சார்பில் அந்நாட்டு உள்த்துறை செயலர் கோவிந் பிரசாத் குசும் தலைமையிலான குழுவினரும் பேச்சுகளில் பங்கேற்றுள்ளனர்.

நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகள் தலைமையிலான அரசு அமைந்த பின்னர் நடைபெறும் முதல் பேச்சுகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாக்.பூகம்பத்தில் 300 பேர் பலி! 46 ஆயிரம் பேர் வீடிழந்து தவிப்பு!!

## கடும் குளிரால் மீட்புப் பணிகளும் பாதிப்பு

இஸ்லாமாபாத்,நவ.01

பாகிஸ்தானில் புதன்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது. சுமார் 46 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். கடும் குளிர் காரணமாக மீட்புக் குழுக்களின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பாகிஸ்தானிலிருந்து விசேட விமானம் மூலம் மருந்து வகைகள், நிவாரணப் பொருள்கள், கூடாரம் அமைப்பதற்கான பொருள்கள் ஆகியவை பலுசிஸ்தான் மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

வெட்டவெளியில் தங்கியுள்ள மக்களுக்கு, 12 ஹெலிக் கொப்டர்கள் மூலமாக போர்வைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. காலநிலை நிவாரணப் பணிகளுக்குக் குந்தகமாகவுள்ளது என இஸ்லாமாபாத்திலுள்ள அரச அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

உலக சுகாதார நிறுவனம் இரு லொறிகளில் மருந்துப் பொருட்களை ஜியாரத் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது. பாதிப்பின் அளவை மதிப்பீடு செய்ய ஐ.நா. சபை குழுவொன்றை அனுப்பியுள்ளது.

வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நிவாரணப் பொருள்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். கடுமையாகப் பாதிக்கப்பட்ட பலுசிஸ்தான் மாகாணத்தின் ஜியாரத், பிஷின் ஆகிய பகுதிகளில் இடிபாடுகளுக்கடியில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டன என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.



பாகிஸ்தான் பூகம்பத்தில் வீடு வாசல்களை இழந்து நிவாரணப் பொருள்களுக்காக காத்திருக்கும் மக்கள்.

பூகம்பத்தை அடுத்து இப்பகுதியில் 44 தடவைகள் நில அதிர்வுகள் ஏற்பட்டன. கடும் பூகம்பத்துக்குப் பின்னர் இது போன்ற அல்லது அளவு குறைந்த நில நடுக்கங்கள் தொடர்ந்து ஆறு நாள்களுக்கு ஏற்படும் என வானியல் நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

ஏறத்தாழ 46 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. பல வீதிகள் மண்சரிவுகளால் துண்டிக்கப்பட்டுள்ளன என உள்ளூர் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

## உலக அரங்கில்

# சீன நிலக்கரிச் சுரங்கங்களில் 57 தொழிலாளர்கள் சிக்கினர்

சீனாவில் விபத்து, வெள்ளப்பெருக்கு ஆகிய அனர்த்தங்களால், மூன்று நிலக்கரிச் சுரங்கங்களில் 57 பேர் சிக்குண்டுள்ளனர். அவர்களை மீட்பதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

வடக்கு சீனாவின் ஷான்சி மாகாணத்திலுள்ள சுரங்க மொன்றில் புதன்கிழமை ஏற்பட்ட எரிவாயு உருளை வெடிப்பால், சுரங்கத்தின் ஒரு பகுதி தகர்ந்து விட்டது. இதனால் வெளியேற முடியாமல், 29 பேர் சிக்குண்டுள்ளனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதே மாகாணத்தில் பிறிதொரு சுரங்கத்தில் வெள்ளம் சூழ்ந்தமையால், 7 பேர் வெளியேற முடியாமல் சிக்குண்டுள்ளனர். மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்திலுள்ள சுரங்க மொன்றிலும் வெள்ளப் பெருக்கால், வெளியேற முடியாமல் 21 பேர் சிக்குண்டுள்ளனர் என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

# மாலைதீவின் புதிய ஜனாதிபதி அடுத்த வாரம் பதவி ஏற்கிறார்

மாலே,நவ.01

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட முஹம்மது அனி நஷீத் நவம்பர் இரண்டாம் வாரத்தில் சம்பிரதாய பூர்வமாக பதவியேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகரான மாலேயில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் இவர் பேசுகையில், "நான் பதவியேற்றதும், தற்போதைய ஜனாதிபதி மாளிகையைப் பல்கலைக்கழகமாக மாற்றுவேன். அரச நிர்வாக ஊழல்களை ஒழிப்பேன்" என்றார்.

கப்பல் பொறியியலாளரான இவர், சுகாதாரம், தகவல் தொடர்புகள் ஆகியவை தொடர்பான திட்டங்களுக்குத் தாம் முக்கியத்துவம் அளிப்பார் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாவது சுற்று ஜனாதிபதித் தேர்தலில், கடந்த 30 ஆண்டுகள் ஜனாதிபதிப் பதவி வகித்த மமூன் அப்துல் கையூம்(வயது71), ஒன்பது சதவீத வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

இதில், மாலைதீவு ஜனநாயகக்கட்சித் தலைவர் முஹமது அனி நஷீத் 54.25 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தற்போதைய ஜனாதிபதி மமூன் அப்துல் கையூமுக்கு 45.75 சதவீத வாக்குகள் கிடைத்தன.

1978 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 30 ஆண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகித்த கையூம், தமது ஆட்சிக்காலத்தில் அரசியல் கட்சிகள் செயற்படத் தடை விதித்திருந்தார். இதை எதிர்த்துப் போராடிய முஹம்மது அனி நஷீத் உட்பட அநேகர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சுமார் ஆறு ஆண்டுகள் நஷீத் சிறையில் இருந்துள்ளார். இதன் பின்னர் பிரிட்டனில் தஞ்சம் அடைந்த இவர், 2005 ஏப்ரல் 30 ஆம் திகதி நாடு திரும்பினார்.

தேர்தல் தோல்வி குறித்துப் பதவி விலகும் ஜனாதிபதி கையூம் செய்தியாளர்களிடம் பேசும் போது, 30 ஆண்டு காலம் ஜனாதிபதியாக பணியாற்ற வாய்ப்பளித்த மக்களுக்கு நன்றி கூறினார். புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்த அவர், ஆட்சி மாற்றம் சுமுகமாக நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

1965 ஜூலை 26 ஆம் திகதி பிரிட்டனிடமிருந்து மாலைதீவு விடுதலை பெற்றது. பல்வேறு திருப்பங்களுக்குப் பின்னர், 1978 இல் அந்நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையூம் சர்வாதிகார ஆட்சியாளராக மாறினார். அதைத் தொடர்ந்து வெடித்த போராட்டங்களில் மூன்று முறை கொலை முயற்சிகளிலிருந்து அவர் தப்பியுள்ளார்.

1998 இல் அவருக்கு எதிராகப் பெரும் புரட்சி வெடித்தது.அப்போது கையூம் இந்திய அரசின் உதவியை கோரினார். உடனடியாக மாலைதீவுக்கு விரைந்த இந்தியப் படைகள் அந்த புரட்சியை முறியடித்தன.

2003 இல் மீண்டும் ஜனநாயகப் போராட்டங்கள் வலுத்தன. ஆனாலும் கையூம் அசைந்து கொடுக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை உட்பட சர்வதேச நாடுகளின் நெருக்குதல் காரணமாக 2004 இல் அரசியல் கட்சிகள் மீதான தடையை அவர் நீக்கினார்.

# இந்தோனேஷியாவில் சுரங்க விபத்தில் 25 பேர் மணலில் சிக்குண்டு பலி!

இந்தோனேஷியாவிலிலுள்ள மணல் சுரங்கமொன்றில் ஏற்பட்ட விபத்தில், 25 ஊழியர்கள் புதையுண்டு, பலியானார்கள். வியாழக்கிழமை மதியம் இவ்விபத்துச் சம்பவித்தது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

ஊழியர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, மணல் சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது. ஊழியர்கள் அதற்குள் புதையுண்டார்கள். மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

இதுவரை ஐந்து ஊழியர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. புதையுண்ட ஏனையோரும் உயிருடன் இருப்பர் எனக் கூறமுடியாது. அவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என இந்தோனேஷிய சுகாதார அமைச்சக அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

விபத்து நிகழ்ந்த சமயத்தில், 25 ஊழியர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இடிந்து விழுந்து மலைபோல் குவிந்துள்ள மணல் குவியலுக்குள் இவர்கள் சிக்குண்டு விட்டார்கள் என அதிகாரி குறிப்பிட்டார்.

# ஒபாமாவின் பிரசாரத்தில் பில்கிளின்டன்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவுக்கு ஆதரவாக, அவரோடு இணைந்து, முன்னாள் ஜனாதிபதி கிளின்டனும் இறுதிவாரப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஒபாமாவும் கிளின்டனும் கூட்டாகச் சுற்றுப்பயணம் செய்து, ஒரே மேடையில் பிரசாரம் செய்து வருகிறார்கள். புளோரிடா மாநிலத்திலுள்ள கிசிமி நகரில் இடம் பெற்ற பிரமாண்டமான தேர்தல் பிரசாரப் பேரணியிலும் இவர்கள் வெகு உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள்.

பேரணியில் இறுதியில் நிகழ்ந்த கூட்டத்தில், கிளின்டன் பேசுகையில், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி பராக் ஒபாமா தான். இதில் சந்தேகமில்லை என உறுதி தொனித்த குரலில் குறிப்பிட்டார்.

"பராக் ஒபாமாவின் தலைமையில், வழிகாட்டலில் அமெரிக்கா புதிய பாதையில் முன்னேறும். உலக அரங்கில் சரிவு கண்டுள்ள அமெரிக்காவின் அந்தஸ்து மீள நிலை நாட்டப்பட்டு விடும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பே தேவை" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, தேர்தலுக்காக ஒபாமா கோடிக்கணக்கில் கொட்டி சரளமாக செலவிட்டு வருகிறார். இதற்கு முன்னர் எவரும் இந்தளவுக்கு நிதியை வாரி இறைத்துச் செலவிட்டதில்லை என குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோன் மெக்கைன் சுட்டிக் காட்டி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோமசுந்தரப் புலவரின் சிலை புனரமைக்க நிதி

மானிப்பாய்,நவ.1

நவாலி மகாவித்தியாலயத்தில் அமைக் கப்பட்டுள்ள சோமசுந்தரப் புலவரின் சிலையை மீள் புனரமைப்புச் செய்வதற்கு நிதி கிடைத்துள்ளது என நவாலி மகாவித் தியாலய முதல்வர் இரா.வசந்தகுமார் தெரிவித்தார்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரது சிலை நவாலி மகாவித்தியாலய முன் னாள் அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரனால் முன்னர் அமைக்கப்பட்டது.

• அதனைத் தொடர்ந்து நவாலி மகா வித்தியாலய ஸ்தாபகர் பண்டிதர் சி.தம்பை யாவின் உருவச் சிலையும் புனரமைக்கப் பட்டது.

நவாலி மகாவித்தியாலய முன்னாள் அதிபரும் தற்போதைய பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபருமான பு.ஸ்ரீவிக்கி னேஸ்வரன் சோமசுந்தரப் புலவர் சிலை யின் வர்ணப் பூச்சுக்கென ஒரு தொகுதி நிதியை வித்தியாலய அதிபரிடம் வழங்கி யுள்ளார்.

இதேவேளை-நவாலி மகாவித்தியா லய பழைய மாணவர்களான செ.சுஜிதரன், டாக்டர் சோ.சுந்தரராஜன், கே.ஜி.எம் ஸ்தாபனத்தின் உரிமையாளர் க.கணேச மூர்த்தி ஆகியோரும் நிதி பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

நவாலி மகாவித்தியாலய பழைய மாணவன் வின்சன் ஜேம்ஸ் கணனி , இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளார்.

இதேபோன்று-இராமநாதன் இராசமணி ஞாபகார்த்த பரிசு, அமரர் முத்து இராசரத் தினம் ஞாபகார்த்த பரிசு, அமரர் தம்பு தர்மலிங்கம் ஞாபகார்த்தப் பரிசு, கணபதிப் பிள்ளை செல்லத்துரை ஞாபகார்த்த பரிசுகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கிடைக்கப் பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார். (202-95)

## கடல்வளப் பயிற்சி

வண்ணை,நவ.1

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியா லயத்தில் கடல்வளம் தொடர்பான பயிற்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக் கம் 3 தினங்களுக்கு நடத்தப்படவுள்ளது.

வித்தியாலய அதிபர் த.ஞானப்பிர காசத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கடலோட்டு மற்றும் எந்திரவியல் கல்லூரி இப் பயிற்சியை மாணவர்களுக்கு வழங் கவுள்ளது. (202-160)


## கந்தஷஷ்டி சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,நவ.1

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கந்தஷஷ்டி சிறப்புச் சொற் பொழிவை கடந்த புதன்கிழமை தொடக் கம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்றது.

தினமும் மாலை 4 மணிக்கு இந்தச் சொற்பொழிவு நடைபெறும்.

இந்தச் சொற்பொழிவில் இன்று சனிக் கிழமை சிதம்பரநாதன் சசீவன் 'உதித்தனன் உலகம் உய்ய' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (50-204)




## சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய ஏழு உணவகங்களுக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதி காரி பிரிவில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய ஏழு உணவு உற்பத்தி நிலையங் களுக்கு நீதிமன்றம் தண்டம் விதித் துள்ளது.

அவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கப் பட்டு விடுக்கப்பட்டனர். உணவு உற்பத்தி நிலையங்களில் சுகாதாரமற்ற முறையில் உணவு உற்பத்தி செய்த எட்டு உணவு உற்பத்தி நிலையங்கள் கண்டு பிடிக்கப் பட்டு அவற்றுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. இதன் போது ஏழு உணவு நிலைய உரிமையாளர் க்ள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களிடமிருந்து தண்டப்பணம் அறவி டப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது.

இந்த நடவடிக்கை இவ்வருடம் ஜூலை மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையுள்ள மூன்று மாதக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 உணவு உற்பத்தி சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 உணவு உற்பத்தி நிலையங்கள் திருப்திகரமான முறையில் உணவு உற்பத்தி செய்து வருகின் றன. 4 உணவு உற்பத்தி நிலையங்கள் திருப் தியற்ற நிலையில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-300)

## அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை: அழைக்கப்பட்டோர் விவரம் இணையத்தில்

அச்சுவேலி, நவ.1

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்,விவரம் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில்(www.moe.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய் யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு, இசுருபாயவில் உள்ள கல்விய மைச்சின் அலுவலகத்தில் நடைபெறும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமதுதம்பி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட் டங்களில் இருந்து தெரிவுசெய்யப் பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று வெள்ளிக்கிழமை வரை கொழும்பு கல்வியமைச்சில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றவுள் ளோருக்கு போக்குவரத்து நிலைமை கருதி எதிர்வரும் 7ஆம் திகதி அதனை நடத்துவ தற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202-11)

## தமிழ்மொழிமூல கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் நவாலி மாணவி முதலிடம்

மானிப்பாய், நவ.1



தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தமிழ் மொழி மூலமான கட்டுரைப் போட்டியில் நவாலியைச் சேர்ந்த மாணவி செல்வி. ஆன் பிரவீனா தியோடர் தேசிய ரீதியில் முதலாம் இடத்திற்கான விருதைப் பெற் றுக் கொண்டார்.

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்கும் இவருக்கு பணப்பரிசில், விருது, தேசியமட்ட சான்றிதழ் என்பன வழங்கப்பட்டுள்ளன.

செல்வி ஆன் பிரவீனா நவாலியூர் குருசுமுத்து தியோடர்-மேரி கொலஸ்ரிக்கா தம்பதியி னரின் கனிஷ்ட புத்திரியாவார். (202-95)

## வெள்ள வாய்க்கால்களில் மண் நிரம்பியுள்ளதால் மழைநீர் குடிமனைகளுக்குள் புகும்நிலை

குருநகர், நவ.1

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந் துள்ள பெரிய வடிகால்கள் மண் நிரம்பி உள்ளதனால் இவ்வடிகால்கள் ஊடாகக் கழிவு நீர் கடலுக்குச் செல்வது தடைப் பட்டுள்ளது. இதனால் வெள்ளநீர் குடிம னைகளுக்குள் புகும் அபாயம் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குருநகர்தண்ணீர் தாங்கிவீதியில் அமைந் துள்ள கழிவுநீர் செல்லும் வடிகாலில் மண் நிரம்பி உள்ளது. இதனால் நீர் தேங்கி நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளது.

குருநகர் பகுதியில் உள்ள சிறிய வடிகால்கள் யாழ்.மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் கிரமமாகச் சுத்திக ரிப்புச் செய்யப்படுகின்றன. இதேபோன்று பெரிய வடிகால்களில் தேங்கி நிற்கும் மண்ணையும் அள்ளி வெளியில் கொட் டும் நடவடிக்கையை யாழ்.மாநகர சபை உடன் மேற்கொள்ளவேண்டும் எனப் பொதுமக்கள் கோருகின்றனர். இல்லா விடில் மழை தொடர்ந்து பெய்யும்போது வாய்க்காலில் நீர் நிரம்பி பொதுமக்களின் குடியிருப்புக்களுள் வெள்ளம் புகுந்து விடும் எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின் றனர். (202-51)

## மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.மாவட்டத்தில் மாவட்ட ஆயுள் வேத வைத்தியசாலை ஒன்றை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

சுதேச மருத்துவத்துறையை அபிவி ருத்தி செய்யும் நோக்குடன் இந்த வைத் தியசாலை அமைக்கப்படவுள்ளது.

வடமாகாண சுதேச வைத்தியத் திணைக் கள மாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் இத்தகவலைத் தெரி வித்தார்.

இவ் வைத்தியசாலையை அமைக்க 20 பரப்புக் காணி தேவைப்படுவதாகவும், காணியை இனங்கண்டு மாவட்ட வைத் தியசாலையை அமைக்க உதவுமாறு யாழ். அரச அதிபரைத் தாம் கேட்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202)



இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் தன்னியக்க பணப்பரிமாற்று சேவை ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் நாடாவெட்டி சேவையை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். இலங்கை வங்கி யின் வடமாகாண கடன் வழங்கும் திட்ட பொறுப்பதிகாரி ஜனனி வசீரவநாதன், மாவட்ட முகாமையாளர் சிவநாதன், கணனி செயற்பாட்டு அதி காரி, யு.டபிள்யூ கீர்த்திஸ்ரீ, வடமாகாண பிராந்திய முகாமையாளர் க.உலகநாதன், செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம், முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்: நவாலிச் செய்தியாளர்)

## குருநகர் யாகப்பர் ஆலயத்துக்கு புதிய குரு

குருநகர்,நவ.1

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் புதிய பங்குத் தந்தையாக அருட்திரு. றோ.நேசராஜா யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் நியம னம் செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருட் திரு.ஆர்.எச்.சகாயநாயகம் யாழ். மறைக் கோட்ட முதல்வராகவும், யாழ் புனித மரியாள் பேராலயத்தின் பங்குத் தந்தை யாகவும் யாழ்.ஆயரால் நியமனம் செய் யப்பட்டுள்ளார். (202-51)

## உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களின் கொடுப்பனவு அடுத்த வாரம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி உள்ள கப் பயிற்சி ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாத கொடுப்பனவுகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று சனிக்கிழமை வழங்கப்படமாட்டாது என அறி[illegible]க்கப் பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு [illegible] வாரம் வழங்கப்படும் என பீடாதிபதி [illegible]க. யோகநாதன் அறிவித்துள்ளார். ([illegible])

## ஜி.சி.ஈ உயர்தரத்தில் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு

யாழ்ப்பாணம்,நவ.1

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த வருடம் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்ற விரும்பும் மாணவர்களுக்கான செயற்பாடு, மற்றும் ஒப்படைகளை சமர்ப் பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தால் வழங்கப் பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படு கின்றது.

21 வயதுக்கு உட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்க விரும் புபவர்களுக்கே இந்தப் படிவங்கள் விநியோ கிக்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பப் படிவங்கள் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதை உயர்தரப் பரீட்சைக் கான விண்ணப்பமாக மாணவர்கள் கருதக் கூடாதென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்குரிய மேலதிக தகவல்களை பெறவிரும்பும் மாணவர்கள் யாழ்கல்வி வலயத் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் பெறாலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது. (204-302)

## அபிஷேக விழா

மந்திகை,நவ.1

தும்பளை தோட்டக் கடவை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த அபிஷேக விழா இன்று சனிக்கிழமை ஆரம்பமா கின்றது.

இந்த அபிஷேக விழா [illegible]து 12 நாள்கள் நடைபெற்று இறுதி நாள் விஷேட அபிஷேகம், பூசைகள், ஆராத னைகளுடன் பூர்த்தியடையுமென ஆலய பரிபாலகர் அறிவித்துள்ளார். (202-218)

## இறந்த ஆத்துமாக்களின் நினைவு நாள் நாளை

குருநகர்,நவ.1

இறந்த ஆத்துமாக்களின் நினைவு நாள் நாளை ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப் படுகின்றது.

இதனையொட்டி கத்தோலிக்க தேவால யங்களில் நாளை காலை விஷேட திருப்ப லிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை அன்று மாலை 4 மணிக்கு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக் கப்படவுள்ளது. (202-51)

## கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.லயன்ஸ் கழக ஆதரவில் கொட் டடி சனசமூக நிலையம் நடத்தும் இலவச கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொட்டடி பாலர் கல்வி நிலையத்தில் நடைபெறும் என நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (204-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெடுந்தீவுக் கோட்டத்தின் கல்வித் தின நிகழ்வு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.
தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஆர்.இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதையும் கிராம அலுவலர் ப.கதிரேசன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அடுத்துள்ள இரு படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)


## தவறிவிட்டது

முல்லையடி வீதி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியுடைய தெய்வேந்திரன் இராசாத்தியம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (526851935V) யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79584)

## தவறிவிட்டது

கச்சாய் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியுடைய திருமதி மரிய அருளானந்தம் மரியறோம் என்பவரதும் செல்வி மரிய அல்வீனா மரிய அருளானந்தம் என்பவரதும் தேசிய அ.அட்டைகள் (388630668V, 835593096V) சாவகச்சேரி, கச்சாய் வீதியில் 30.10.2008 வியாழக்கிழமை தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (79571)


## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்.கல்வித்திணைக்களம் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின்அனுசரணையுடன் குடாநாட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் பயிற்சிப்பட்டறையை நடத்தியுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட யாழ்.கல்வி வலய ஆசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை யாழ்.வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஏனைய கல்வி வலய ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் அந்தந்த வலய உதவிக் கல்விப்பணிப்பாளர்களிடம் அன்றைய நிகழ்வில் வைத்துக் கையளிக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204-302)

## யாழ்.நகர நலன்புரி நிலையங்களில் 45 குடும்பங்கள் வாழ்கின்றன

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இயங்கிவரும் மூன்று நலன்புரி நிலையங்களில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் தொடர்ந்தும் தங்கியுள்ளனர் என யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகம் தெரிவித்தது.

நாவாந்துறை சென்.நிக்கிலஸ் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேரும் -

யாழ்.கதீஜா முஸ்லிம் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேரும் -

யாழ்.அடைக்கல அன்னை பாடசாலை நலன்புரி நிலையத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் தங்கியுள்ளார்கள்.

இவர்களில் 6 மாதம் தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 18 பேரும் அடங்குவர் எனவும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-300)


## சேவைநலன் பாராட்டு



இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெறும்

**B.A.அருமைநாயகம்**

அவர்களது சேவையை வாழ்த்துகின்றோம்.

லைடன் புடைவையகம்,
இல.410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/555151)

உரிமையாளரும், பணியாளர்களும்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



01 . 11 . 2008

அல்வாய், "தங்கத்தாமரையைச்" சேர்ந்த சிறிரங்கநேசன் - ஜெயந்தினி தம்பதியரின் செல்வப்புதல்வி ஹம்சாஜினி இன்று (01.11.2008) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளைக் கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, ஐயா இஞ்சாம்மா, அப்பம்மா, அம்மம்மா, அன்ரா, ஆசையப்பா, அத்தை, கனடா பெரியப்பா குடும்பம், இத்தாலி அத்தை குடும்பம், தாத்தா, பாட்டி, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், பெரியத்தான், அத்தான்மார், மச்சாள், அண்ணாமார், அக்காமார் ஆகியோர் அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் அருளால் பல்கலைகளும் பெற்றுச் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

ஹம்சாஜினி

க.தங்கவேல்.
'பொன் அகம்',
அல்வாய். (சி/555151)

## திருமண வாழ்த்து

இன்று (01.11.2008) சனிக்கிழமை
லண்டனில் திருமண பந்தத்தில் இணையும்
திரு.திருமதி தனபாலசிங்கம்
தம்பதியினரின் புதல்வனும்
திரு.திருமதி நடராஜா
தம்பதியினரின் புதல்வியும் ஆகிய
**சிவறஞ்சன் – நிஷாந்தி**
தம்பதியினரைச் சகல
சௌபாக்கியங்களையும்
பெற்று நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி தனபாலசிங்கம் இராஜலட்சுமி (கொழும்பு).
திரு. திருமதி பிரபாகரன் சிவப்பிரியா (லண்டன்).
திரு. திருமதி சிவகுமார் சிவசக்தி (கொழும்பு).
திரு.திருமதி இராசரத்தினம் (மாமா குடும்பத்தினர்).

கந்தசாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி. (79552)

## புதுக்கடைத் திறப்பு நிகழ்வு



**SAI RAAM MOTORS** கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**சாயிராம் மோட்டோர்ஸ்** (மக்கள் வங்கி முன்பாக)

அன்பான வாடிக்கையாளர்களே! மேற்படி பெயரைக் கொண்ட வாகன உதிரிப்பாக விற்பனை நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு சாயிபாபாவின் திருவருள் கிடைத்திருப்பதால், நாளை (02.11.2008) ஞாயிற்றுக்கிழமை திறந்து நடத்த எண்ணியுள்ளோம். எம்மிடம் சைக்கிள், ஓட்டோ, மோட்டார் சைக்கிள், வான் ஆகியவற்றிற்குரிய தரமான உதிரிப்பாகங்களும் ரயர், ரியூப் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் அனைத்து நவீன வாகனங்களுக்குரிய ஒயில் பில்ரர், டீசல் பில்ரர், எயார் கிளீனர் வகைகளும் என்ஜின் ஒயில் (CALTEX, CASTORL) வகைகளும் அத்துடன் சேவிஸ் நிலையங்களுக்கான 'L.G' கிறீஸ் பம், L.G அதி உயர் அமுக்க தண்ணீர் பம் ஆகியவற்றுடன் அவற்றிற்குரிய உதிரிப்பாகங்களும் கொள்வனவு செய்வதுடன் உத்தரவாதத்துடன் கூடிய திருத்த வேலைகளும் செய்து கொள்ளலாம்.




தரமான பொருள்களுடன் கூடிய நம்பிக்கையான சேவை. வாகனச் சுத்திகரிப்பு சேவையில் 30 வருட அனுபவம் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

சாயிராம் மோட்டோர்ஸ்
இல.02, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் சந்தி,
சுன்னாகம். T.P.No.: 060 221 7771

தங்கள் நல்வரவை நாடும்:
றோயல் சேவிஸ் நிலைய உரிமையாளரும் மைந்தரும் - சுன்னாகம். (79533)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்மூடும் சுவடுகள்.....!

– நட்சத்திரபாலன்



இன்னும் சிலநாள்களில் நடைபெற இருக்கின்ற திருமணத்துக்காக அந்த வீடு அழகுபடுத்தப்பட்டிருக்கிறது.

புதிதாகப் பூசப்பட்ட வர்ணங்களின் வாசனை உள்ளே பரவியிருக்கிறது.

சத்தமும், கலகலப்புமாய் வீடு உயிர்ப்போடு திகழ்கிறது. வாசலில் போடப்பட்டிருந்த கதிரையொன்றில் அமர்ந்திருக்கிறாள் 'ராசம்மா அக்கா' என அழைக்கப்படும் மூதாட்டி.

சிரிப்பும், கும்மாளமுமாய் கலகலத்தபடி வந்து சேர்கிறது இளம்பெண்கள் பட்டாளமொன்று.

'ஸ்கூட்டிகளை' நிறுத்தியபடி, ''அம்மம்மா... நிவேதிகா நிக்கிறாவோ...'' என ஒரு குரல் பலமாய் எழுகிறது.

''வீட்டில பொம்பிளை நிக்காமல் உன்னையும் என்னையும்போல சுத்துவாளெண்டோ நினைச்சாய்...?'' என ஒரு பெரிய ஜோக் சொல்லிவிட்டது போல் தானே சிரிக்கிறாள் இன்னொரு யுவதி.

தானும் சிரித்தபடி, ''அவள் பிள்ளை சொன்னது சரிதான். பொம்பிளை இப்ப வீட்டில இல்லை. அவள் தன்ர சிநேகிதப் பிள்ளையோட அதெதோ 'பேசல்' செய்யிறதோ ஏதோவாம்... முகத்தில பருக்கள், மறு உதுகள இல்லாமச் செய்யிறதாம்... அங்க போட்டாள்... நீங்கள் உள்ளுக்க வாருங்கோவன். அவ இப்ப வந்திடுவா...''

''எட...! 'பேசியல்' செய்யப்போட்டாவோ...? அப்பசரி! வரட்டும். நாங்கள் அம்மம்மாவோட 'ஹாயா' இருந்து கதைப்பம். வாங்கோப்பா...'' என்று ஒருத்தி சொல்ல, மற்றவர்களும் உள்ளே வந்து அமர்கிறார்கள்.

''பேத்திக்கு கலியாணம் எண்டதில் அம்மம்மாவுக்கு நல்ல சந்தோஷம்தான். என்ன அம்மம்மா...?''

''பின்ன...? இல்லாமலே...? ஆன காலத்தில குமருகள் கரைசேர்ந்தால் சந்தோசம்தானே பிள்ள...'' என்கிறாள் அம்மம்மா.

''உங்கட காலத்தில கலியாணமெண்டால் இப்பிடியெல்லாம் இருந்திருக்காது என்ன?'' என்ற கேள்விக்குப் பலமான சிரிப்போடு -

''எங்கட காலத்திலயோ? உந்தப் பூசல் ஒண்டும் இல்லையடிபிள்ள. உதைப்பற்றியெல்லாம் ஆர் யோசிக்கிறது...? என்ர முகத்தில இருந்த கறுப்பு மச்சம் எனக்கு வடிவெண்டுதான் என்ர மனிசன் சொல்லுறவர்...'' இதைச் சொல்லும்போது இந்த வயதிலும் அம்மம்மாவின் முகம் சிவக்கிறது.

''நிவேதிகா 'பிளெவுசுகளை' ஆரிட்டையாம் தைக்கக் குடுத்தவா? இப்ப நவமணி அக்காவும் ஊரில இல்ல.'' எனத் தொடர்ந்த கேள்விக்கு-

''ஒரு புதுப்பிள்ளை இப்ப எங்கட மூண்டாம் ஒழுங்கையில வந்திருக்கிறாளாம். நல்லவடிவாத் தைப்பாளெண்டு அவளிற்றத்தான் குடுத்தவள்போல'' எனப் பதிலளிக்கிறாள் அம்மம்மா.

''உங்கட காலத்தில எப்பிடி அம்மம்மா, 'பாஷன்' எல்லாம்? 'ஸ்ரைலா' தைப்பினமே...?'' வேடிக்கையாய்க் கேட்கிறாள் ஒருத்தி.

''என்ர கூறைச்சட்டை தைச்ச கதையே ஒரு புதினமடி பிள்ளை. வழக்கமா நல்லூர்ப் பின் வீதியில ஒரு மனிசிதான் எங்கட விசேசங்களுக்குத் தைக்கிறது. என்ர கலியாண நேரத்தில அந்த மனிசிக்கெல்லோ அம்மாள் வருத்தம் வந்திட்டுது''

''பிறகு...?''

''பிறகென்ன? வேற ஒரு மனிசியிட்ட குடுப்பமெண்டிருக்க, அதிலும் ஏதோ தடை வந்து, எங்கட குஞ்சாச்சி தில்லைப்பிள்ளைதான் அதைத் தைச்சுத் தந்தவா. அப்ப தையல் மிசின் ஒண்டும் கிடையாது. கைத்தையல்தான். குஞ்சாச்சி அங்கின பீத்தல், கிழிசல் தைச்சுத்தான் பழக்கம். ஒரு மாதிரி ஒரு அளவு சட்டைய வச்சுக் கீறி... அதிலுமொரு புதினம் அப்ப கத்தரிக்கோல் வீடுகளில் குறைவு. குஞ்சாச்சி தன்ர பாக்குவெட்டியாலதான் துணியை வெட்டி, தைச்சு முடிச்சவ.''

''இஞ்ச பாருமப்பா! பாக்குவெட்டியால துணி வெட்டினதாம்!!''

''மெய்யாத்தான் பிள்ளை, அப்பிடி நடந்தது! வேற என்ன செய்ய...? நாங்கள் முட்டுப்பட்ட சனங்கள். தேவையான சாமானெல்லாம் வாங்க எங்களால முடியுமே...?''

''அந்தச் சட்டையப் போட்டனீங்களே அம்மம்மா?'' ஒருத்தி நக்கலாகக் கேட்கிறாள்.

''இவள் நான் சொல்லுறதை நம்பேல்லைக் கண்டியோ! நம்பினாலும் நம்பாட்டிலும் இதுதான் நடந்தது.''

''உங்கட குடும்ப வாழ்க்கை எப்பிடி இருந்தது?''

''ஒ... அதுக்கென்ன குறை? சோக்காத்தான் வாழ்ந்தனாங்கள். என்ர மனிசன் தேங்காய் யாவாரம். வீடு மேய, வேலி அடைக்கவும் போறவர்... கடவுளேயெண்டு மூண்டு நேரமும் வீட்டில அடுப்பெரிஞ்சுது.''

''உங்களுக்குள்ள சண்டை ஒண்டும் வராதோ?''

''சண்டையோ...? என்ர சிமான் கடும் கோவக்காரன்தான். எண்டாலும் என்னில சரியான பட்சம். எனக்கேதும் ஒண்டெண்டால் மனிசனுக்குத் தாங்காது. நான் சாப்பிட ஏலாமல் கிடந்தால் மனிசனும் ஒண்டும் சாப்பிடாது. அப்பிடி ஒரு புறியம், எங்களுக்குள்ள. அந்த மனிசன் மனம்நோக என்னால நடக்கவோ, பேசவோ முடிஞ்சதில்லை. அம்மா, அப்புவைவிட என்ர அவர் என்னை நல்லாத்தான் வச்சிருந்தவர். ஒரேயொரு துக்கம். 48 வயசில அவர் போய்ச்சேர்ந்திட்டார். பிறகு நான்தான் மாடு வளத்தும், கடகம், சுளகு முடைஞ்சு வித்தும், என்ர நாலு பிள்ளையளையும் வளத்தனான்...''


சொல்லிமுடித்து நிமிர்ந்த அம்மம்மாவின் கண்கள் கலங்கிப்போகின்றன.

''இஞ்சையப்பா! சந்தோசமான நேரத்தில ஏனப்பா அம்மம்மாவின்ர மனம்நோகக் கதை குடுக்கிறியள்?'' என பேச்சுக்கு முற்று வைக்கிறாள் ஒருத்தி.

''அதுக்கென்னடி பிள்ளை? எங்கட வாழ்க்கையையும் நீங்கள் அறியவேணும். அப்ப இருந்த உறவென்ன...? பாசமென்ன...? அதுஒரு காலம்... அதுஒரு வாழ்க்கையடி பிள்ளையள்...''

(இன்னும் சுவடுகள் பதியும்..)

# ஒரு தபால்பெட்டி பேசுகிறது




இதெல்லாம் எனக்கு எப்படிப் புரிந்தது என்று கேட்கிறீர்களா? கேளுங்கள். ஒரு தாய் தனது மகனுக்கும், மகளுக்கும் எழுதிய கடிதம் ஒன்று, திறந்த கடிதமாக என்னிடம் கிடைத்தது. அதனை வாசித்தேன். மிகவும் பயனுள்ள கடிதம்.

''அன்புள்ள செல்வங்களுக்கு! நீங்கள் இறைவன் கருணையோடு நீடு வாழவேண்டுமாக இருந்தால், மது, மாது, நகை, பணம், சீதனம், வீடு, வாகனம், பதவி என்று பேராசை கொள்ளாதீர்கள். தரப்பட்ட கடமையை நேர்த்தியாகச் செய்யுங்கள். கடன் கேட்காதீர்கள். உழைத்துச் சாப்பிடுங்கள். உங்களது அப்பாவும், நானும் என்றுமே இவற்றைக் காப்பாற்றி வருகின்றோம். உங்களது அப்பா என்னைத் திருமணம் செய்யும்போது, இருவருமே வறுமையால் பீடிக்கப்பட்டிருந்தோம். இருந்தும் நன்றாகப் படித்தோம். கடினமாக உழைத்தோம். இப்போது ஆண்டவன் புண்ணியத்தால் நாம் நன்றாக இருக்கின்றோம் அல்லவா? உங்களிடம் வரமுடியவில்லை. காரணம் கிராமங்களில் வாழ்கின்ற சுகம் எங்கு கிடைக்கப் போகிறது?... இப்படிக்கு அன்பு அம்மா.''

இந்தக் கடிதம் என்னை செப்பனிட்டது. நான் ஒரு நல்ல தபாற்பெட்டியாக, இருபத்தினான்கு மணிநேர சேவையுடன் உங்களுக்காகக் காத்திருக்கின்றேன். என்னுடன் நீங்களும் வெற்றிபெற வாருங்கள். வருவீர்களா?

(தபாற்பெட்டி மூடப்படுகிறது)

# 'குவிஸ்லிங்' யார்?




குவிஸ்லிங் (Quisling) என்ற ஆங்கிலப் பதம் தனது சொந்த நாட்டுக்குத் துரோகமிழைத்து, எதிரிகளுடன் ஒத்துழைக்கும் தேசத்துரோகியைக் குறிக்கின்றது.

இது ஆங்கிலச் சொற்கூட்டத்தில் இடையிலே சேர்ந்த ஒரு சொல்லாகும்.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் திகதி 'குவிஸ்லிங்' என்பவன், நோர்வே நாட்டுக்குத் துரோகமிழைத்து, ஜேர்மன் படைகளுடன் ஒத்துழைத்தான். நோர்வேயில் ஜேர்மனி அமைத்த பொம்மை அரசாங்கத்தின் தலைவனாகவும் இவன் இருந்தான்.

இத்தேசத்துரோகியின் பெயரே, தேசத்துரோகிகளைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாக இப்போது வழக்கிலுள்ளது.

(தகவல்: 'லிவ்கோ' ஆங்கில அகராதி)

# வார வசந்தம்

## சிறுவர் கதைகள் 04

# சிவப்பு விமானம்

போ.சத்தியன்

அம்மாவும், மகனும் அட்டைப் பெட்டியைச்சுற்றி மூடி ஒட்டப்பட்டிருந்த கடதாசியை வெட்டி அகற்றி, பார்சலை மெதுவாகத் திறந்தார்கள். பார்சலினுள்ளே ஒரு காகிதத்தாள் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அம்மா அதை எடுத்துப் பிரித்துப்பார்க்க, வாசு பார்சலினுள்ளிருந்த அந்த அழகான அட்டைப்பெட்டியைக் கைகளில் எடுத்துக் கொண்டான். அட்டைப் பெட்டியிலே அற்புதமானதொரு சிவப்புநிற விமானத்தின் படம் வரையப்பட்டிருந்தது. கையிலிருந்த பெட்டியை மெதுவாகக் குலுக்கிப்பார்த்தான். கலகலவென ஏதோ பொருள்கள் குலுங்கும் சத்தம் கேட்டது.

அட்டைப்பெட்டியிலே ''மின்சாரப் பொம்மை விமானம்'' என்று, ஆங்கில எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. அதற்குள் காகிதத்தைப் படித்து முடித்த அம்மா, சிரித்தபடியே அதை வாசுவிடம் கொடுத்தார். ''உரத்துப்படி பார்க்கலாம்'' என்று அன்புடன் சொல்லியவர், பொம்மை விமானம் இருந்த அட்டைப்பெட்டியை வாசுவிடம் இருந்து வாங்கிப்பார்த்தார்.



கடிதத்தை வாசு உரத்துப் படித்தான். அதில் ''அன்புள்ள வாசு! உனக்கு எனது அன்புப்பரிசு. இந்த கடிதத்திற்கு நிச்சயமாக எனக்குப் பதில் எழுதவேண்டும். மேலும் பல பொம்மைகளை உனக்கு அனுப்பி வைப்பேன். அம்மா மற்றும் அனைவருக்கும் எனது அன்பு உரித்தாகட்டும். அன்பு மாமா''.

கடிதத்தைப் படித்துமுடித்த வாசு அதைப் பக்குவமாக மடித்து அம்மாவிடம் கொடுத்தான். மகனது முகத்தில் நிறைந்திருந்த மகிழ்ச்சி கண்டு தாயாரது மனதும் பூரிப்பால் நிறைந்தது. ''எங்கே, அட்டைப்பெட்டியைத் திறந்து உனது பொம்மை விமானத்தை எடுத்திடு பார்க்கலாம்'' என்று வாசுவை அவசரப்படுத்தினார் அம்மா. தனது அருமைத்தம்பியாரின் பரிசுப்பொருளைப் பார்ப்பதில் அவருக்கும் ஆர்வம் அதிகமாயிருந்தது.

அட்டைப்பெட்டியைப் பிரித்த வாசுவின் கண்கள் ஆச்சரியத்தால் அகலவிரிந்தன. பெட்டியினுள் பளபளவென மினுங்கும் சிவப்புநிற விமானம் காட்சிகொடுத்தது. மெதுவாக அந்த விமானத்தைக் கைகளில் எடுத்துப்பார்த்தான். ஒரு சோடி இறப்பர்ச்சில்லுகளும், மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடியும், மெத்தென்ற இருக்கையும் சிறுவன் வாசுவின் மனதில் சொல்லிட முடியாத அளவுக்கு ஆனந்தத்தைத் தோற்றுவித்தன. உண்மையானதொரு விமானத்தையே அச்சில் வார்த்து வைத்தது போலிருந்தது அந்தப் பொம்மை விமானம்.

விமானத்தைத் தவிர அட்டைப் பெட்டியினுள், இரண்டு மனித உருவப் பொம்மைகளும், விமான நிலையத்தின் அமைப்பினை ஒத்த கட்டடப் பொம்மை ஒன்றும், சின்னஞ்சிறிய கைப்பெட்டிகள், கொக்கிகள், தலைக்கவசங்கள், மரங்கள், பூச்செடிகள் என்று ஏராளமான சின்னஞ்சிறிய விளையாட்டுப் பொருள் களும் நிறைந்திருந்தன.

விமான நிலையக் கட்டடப் பொம்மையின் சிறப்பு என்ன தெரியுமா? அதன் யன்னல்கள், கதவுகள் எல்லாம் திறக்கக் கூடிய விதத்தில் அமைந்திருந்தன. அதன் கூரையிலே ஒரு 'ரேடார்' பொருத்தப்பட்டிருந்தது. அதை அங்குமிங்கும் அசைக்கக் கூடியதாயுமிருந்தது. தரையிறங்கிடும் பொம்மை விமானத்தின் அசைவுகளையெல்லாம் கவனித்திட இந்த 'ரேடார்' உதவிடுமல்லவா?

இவற்றைவிட அட்டைப்பெட்டியினுள் சதுரவடிவமான சில பிளாஸ்ரிக் தட்டுகள் காணப்பட்டன. அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்து, விமான ஓடுபாதை ஒன்றை அமை[illegible] இவற்றையெல்லாம் பார்த்த [illegible] மகனைக் கட்டிக்கொண்டு செல்லமாக அவன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

''பார்த்தாயா வாசு! உன் மாமா எவ்வளவு அன்புமிக்கவர். அருமையான பொம்மைகளை உனக்கு அனுப்பியுள்ளார்.'' என்று ஆனந்தமாகச் சொன்னார். தனது தம்பியின் அன்பை எண்ணி அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தன.

விமானத்தைக் கைகளில் எடுத்த வாசு, அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். சிவப்பு விமானத்தின் செட்டையிலும் வால் பகுதியிலும் பொருத்தப்பட்டிருந்த விளக்குகள் உண்மையிலேயே எரியக்கூடியவையா என்று அவனுக்குச் சந்தேகமாகயிருந்தது. விமானத்தின் மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடியை கைவிரல்களால் சுழற்றிப் பார்த்தான். இறப்பர்ச் சில்லுகள் உண்மையிலேயே காற்றால் நிரப்பப்பட்டவை போலிருந்தன. மின்கலங்களை இணைக்கும் இடம் விமானத்தின் வயிற்றுப் பாகத்தில் இரண்டு சில்லுகளுக்கும் நடுவில் இருந்தது. அந்த இடத்திலேயே சிவப்பு நிற ''சுவிச்'' ஒன்றும் காட்சியளித்தது. விமானத்தை இயக்கிடும் விசை அதுவாகும். மின்கலங்களை இணைத்து, சுவிச்சைத்திருப்பி விமானத்தை இயங்கச் செய்தான் வாசு.

விமானத்தின் மூக்கில் பொருத்தப்பட்டிருந்த காற்றாடி விர்ரென்ற ஓசையுடன் வேகமாகச் சுழன்று இயங்கியது. வாசுவின் ஊகம் சரியானதே. செட்டைகளிலும் வாலிலும் பொருத்தப்பட்டிருந்த சின்னஞ்சிறிய விளக்குகள் மின்னி மின்னி எரிந்தன. அவற்றைவிட மூக்குப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த வெள்ளைநிற முகப்பு விளக்கு வாசுவின் குதூகலத்தை இன்னும் பலமடங்காக்கியது.

[அடுத்தவாரமும் விமானம் பறக்கும்...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் - 1

34/T/I
One Hour

ஆசிரியர்: GRAPHS குமரன் - Girls' High School - Kandy.

01. வித்து முளைத்தலுக்கு அவசியமற்ற காரணியாக இருப்பது,
(1) வளி (2) ஒளி (3) நீர் (4) சிறப்பு வெப்பநிலை

02. X இனது ஒட்சைட்டின் சூத்திரம் XO ஆகும். X இனது குளோரைட்டின் சூத்திரம்,
(1) $X_2Cl$ (2) $XCl$ (3) $XCl_2$ (4) $XCl_3$

03. ஒளித்தொகுப்பிற்கு அவசியமான காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
a - காபனீரொட்சைட் b - நீர் c - சூரியஒளி d - பச்சையம்
இவற்றுள் ஒளித்தொகுப்புத் தாக்கத்தில் தாக்கிகளாக உள்ளவை,
(1) a, b (2) b, c (3) c, d (4) a, d

04. உப்பளங்களின் இரண்டாம் தொட்டியில் வீழ்படிவாகுவது,
(1) $Fe_2O_3$ (2) $CaCO_3$ (3) $CaSO_4$ (4) $MgCl_2$

05. அரங்கு ஒன்றில் எதிரொலியைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அவ் அரங்கின் மேடைக்கும் எதிர்ப்புறச் சுவருக்கும் இடையேயான தூரமாக இருக்கக் கூடியது,
(1) 5m (2) 10m (3) 15m (4) 20m

06. வீட்டு மின்சுற்றில் விளக்குச் சுற்றினை அமைக்கப் பொருத்தமான மின் வடத்தின் குறியீடு,
(1) 1/1.13 (2) 7/0.50 (3) 7/0.85 (4) 7/0.67

07. இதயத்தின் தொழிற்பாடு பற்றிச் சில மாணவர்கள் கலந்துரையாடினர். அவர்களின் சம்பாஷணையில் இருந்து பெறப்பட்ட சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானது என நீர் கருதுவது,
(a) சோணையறைகள் சுருங்கும் போது ஏற்படும் அமுக்கம் சுருங்கலமுக்கம் எனப்படும்.
(b) சோணையறைகள் சுருங்கும் போது இருகூர், முக்கூர் வால்வுகள் மூடப்படுகின்றன.
(c) இதயவறைகள் இரண்டும் ஒருமித்து சுருங்குகின்றன.
(d) இதயவறைகள் தளரும் போது அரைமதி வால்வுகள் மூடப்படுகின்றன.
(1) a மட்டும் (2) b மட்டும் (3) a, c ஆகியன (4) c, d ஆகியன

08. ஆடலோட்டத்தை நேரோட்டமாக மாற்றும் வலுப்பொதியை அமைக்க தேவையற்ற சாதனம்,
(1) இருவாயி (2) மூவாயி (3) கொள்ளளவி (4) நிலைமாற்றி

09. பகலில் கடல்நீரை விட, கடற்கரைமண் அதிக சூடாவதற்குக் காரணம்,
(1) பகலில் சூரிய வெப்பம் அதிகமாக இருத்தல்.
(2) நீரை விட மண் குறைவாக இருத்தல்.
(3) நீரை விட மண்ணின் தன்வெப்பக் கொள்ளளவு குறைவாக இருத்தல்.
(4) நீரை விட மண்ணின் தன்வெப்பக் கொள்ளளவு அதிகமாக இருத்தல்.

* 10, 11 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமான மிகவும் பொருத்த மான வாயுக்களைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிந்தெடுக்க.
A - நைத்திரிக் ஒட்சைட B - மெதேன் C - குளோரோ புளோரோ காபன்
D - காபனீரொட்சைட் E - கந்தகவீரொட்சைட் F - நைதரசனீரொட்சைட்

10. புவி வெப்பமடைதலிலும், ஓசோன்படை சிதைவிலும் செல்வாக்குச் செலுத்துவது
(1) C (2) B, D (3) E (4) A, F

11. அமில மழைக்குக் காரணமாக அமைவது
(1) A, C (2) D, F (3) E, F (4) D, E, F

12. முகச்சவரம் செய்ய மிகப்பொருத்தமான ஆடி,
(1) 5cm குவியத்தூரம் கொண்ட குவிவாடி (2) 15cm குவியத்தூரம் கொண்ட குவிவாடி
(3) 5cm குவியத்தூரம் கொண்ட குழிவாடி (4) 15cm குவியத்தூரம் கொண்ட குழிவாடி

13. பின்வரும் இயல்புகள் காணப்படுதல் எக்கூட்டத்தில் அங்கியை வகைப்படுத்த உதவும்?
* முண்ணானின் முற்பகுதி மூளையாக விருத்தி அடைந்திருத்தல்.
* மண்டையோடு காணப்படல். * குதப்பின் வால் காணப்படல்.
(1) முள்ளந்தண்டுளிகள் (2) முள்ளந்தண்டிலிகள் (3) பாலூட்டிகள் (4) மனிதன்

14. காபனின் 0.5 மூலில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கைக்குச் சமனான அணுக்கள் கொண்ட ஒட்சிசன் வாயு வின் திணிவு ( C = 12 , O = 16 )
(1) 4g (2) 8g (3) 16g (4) 32g

15. பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
(1) 12V கலத்துடன் 12V குமிழைத் தொடர் நிலையில் இணைக்க முடியும்.
(2) 12V கலத்துடன் 3V குமிழ்கள் 4ஐத் தொடர் நிலையில் இணைக்க முடியும்.
(3) 12V கலத்துடன் 6V குமிழ்கள் 2ஐச் சமாந்தர நிலையில் இணைக்க முடியும்.
(4) 12V கலத்துடன் 12V குமிழ்கள் 2ஐச் சமாந்தர நிலையில் இணைக்க முடியும்.

16. உடலினுள் குருதி உறைவதைத் தடுக்கும் "எப்பாரின்" எனும் புரதத்தைச் சுரக்கும் வெண்குருதிக்கலவகை,
(1) நடுநிலைநாடி (2) அமிலநாடி (3) மூலநாடி (4) ஒற்றைக்குழியும்

17. வினாகிரி உற்பத்தியின் போது "அசற்றோபக்ரர்" பற்றீரியாவினால் மேற்கொள்ளப்படுவது,
(1) ஒட்சியேற்றல் (2) தாழ்த்தல் (3) நொதித்தல் (4) வெளிற்றல்

18. பற்றீரியாவின் கலச்சுவரை அழிக்கவல்ல "இலைசோசைம்" நொதியம் அடங்கியிருப்பது,
(1) வியர்வை (2) நெய்ச்சுரப்பு (3) சீதம் (4) கண்ணீர்

19. 0.1mol $dm^{-3}$ செறிவுடைய குளுக்கோஸ் கரைசலின் திணிவு - கனவளவு வீதச் செறிவு,
(1) 0.1% (2) 10% (3) 1.8% (4) 18%

20. கணத்தாக்கங்களைக் கலவுடலில் இருந்து வெளிநோக்கிக் கடத்துவது,
(1) உட்காவு நரம்பு முளை (2) உட்காவு நரம்புக் கலம்
(3) வெளிக்காவு நரம்பு முளை (4) வெளிக்காவு நரம்புக் கலம்

21. பாலன், சீலன், ரூபன் ஆகியோரின் குருதி இனங்கள் முறையே $A^+$, $B^-$, $O^+$ ஆகும். பின்வரும் குருதி மாற்றீடு தொடர்பான கூற்றுக்களில் சரியானதைத் தெரிக.
(1) சீலன் பாலனுக்குக் குருதி வழங்க முடியும்
(2) ரூபன் பாலனுக்குக் குருதி வழங்க முடியும்
(3) ரூபன் பாலன், சீலன் ஆகியோருக்குக் குருதி வழங்க முடியும்
(4) பாலன் ரூபனுக்குக் குருதி வழங்க முடியும்


22. பெண்களில் சூல் உற்பத்தியாதல் ஆரம்பிக்கும் காலப்பகுதி,
(1) பிறப்பிற்கு முன்னர் (2) பிறப்பின் போது (3) பிறந்தவுடன் (4) பூப்பெய்திய பின்

23. உயிர்க்கோளத்தின் ஒழுங்கமைப்பு மட்டங்களில் உயிரற்ற கூறுகளை உள்ளடக்கியுள்ள ஒழுங்கமைப்பு மட்டம்,
(1) தனியன் (2) குடித்தொகை (3) சாகியம் (4) சூழற்தொகுதி

24. லொறியில் வந்த சீனி மூடைகளை இறக்கும் தொழிலாளி ஒருவர் அம்மூடைகளை முதுகில் சுமந்து சென்றார். அவர் அவ்வாறு செய்தமைக்கான காரணம்,
(1) முதுகில் சுமக்கும் போது சீனி மூடையின் நிறை குறைவாக இருக்கும் என்பதால் ஆகும்.
(2) முதுகுப்பரப்பு அதிகமாக இருப்பதால் அமுக்கம் குறைவாக இருக்கும் என்பதால் ஆகும்.
(3) தலையின் பரப்பு குறைவாக இருப்பதால் நிறை அதிகரிக்கும் என்பதால் ஆகும்.
(4) முதுகிலும் பார்க்க தலையில் அதிக விசை தாக்கும் என்பதால் ஆகும்.

25. பொறிகளின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் செய்யப்பட்ட சில செயல்கள் கீழே தரப்பட்டுள்ளன இவற்றுள் வினைத்திறனை அதிகரிக்கும் என நீர் எதிர்பார்ப்பது பின்வருவனவற்றுள் எது என்பதைத் தெரிவு செய்க.
(1) பொறிமுறை நயத்தை அதிகரித்து, வேக விகிதத்தைக் குறைத்தல்.
(2) பொறிமுறை நயத்தைக் குறைத்து, வேக விகிதத்தை அதிகரித்தல்.
(3) பொறிமுறை நயம், வேக விகிதம் இரண்டையும் அதிகரித்தல்.
(4) பொறிமுறை நயம், வேக விகிதம் இரண்டையும் குறைத்தல்.


26. அருகே காட்டப்பட்டுள்ள மின்சுற்றின் செயற்பாட்டின் மூலம் பெறப்படும் விளைவைக்காண்பிக்கும் படலை பின்வருவனவற்றுள் எது?




27. கூட்டு நுணுக்குக்காட்டி தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - பொருளைப் பொருளியின் குவியத்தினுள் வைக்க வேண்டும்.
B - பொருளியினால் ஏற்படும் விம்பம் பார்வைத் துண்டின் F - 2கு இடையில் அமையும்.
C - தோன்றும் இறுதி விம்பம் நிமிர்ந்த மாய விம்பம்.
D - பொருளியால் உண்டாக்கப்படும் விம்பம் அதன் 2F இற்கு அப்பால் அமையும்.
மேலுள்ள கூற்றுக்களில் உண்மையானது
(1) A மட்டும் (2) D மட்டும் (3) A, C ஆகியன (4) B, D ஆகியன

28. மண்ணின் தரத்தை அதிகரிப்பதில் களிமண் முக்கிய பங்கு வகிக்கின்றது. களிமண்ணின் செயற்பாடுகளில் பிரதானமாக அமைவது,
(1) மண்ணிற்குச் சிறந்த கட்டமைப்பை வழங்குதல்.
(2) மண்ணில் கற்றயன்களை பேணி வைத்தல்.
(3) மண்ணில் பற்றீரியாக்களின் தொழிற்பாட்டை அதிகரித்தல்.
(4) மண்ணில் நீரை நிலைநிறுத்திக் கொள்ளல்.

29. மாலா, சீலா வீட்டுக்குச் சென்றுள்ளதைக் காட்டும் இடப்பெயர்ச்சி - நேர வரைபு தரப்பட்டுள்ளது. இதில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் பின்வருவனவற்றுள் எது?
(1) $4ms^{-2}$ ஆர்முடுகலுடன் சென்றுள்ளாள்.
(2) மாலா வீட்டிலிருந்து சீலாவின் வீடு 150m தூரத்தில் உள்ளது.
(3) மாலா, சீலா வீட்டில் 5s தங்கியிருந்தாள்.
(4) மாலா சீலா வீட்டிற்குச் செல்ல எடுத்த நேரம் 10s ஆகும்.





30. X, Y, Z ஆகிய உலோகங்களின் சேர்வைகள் சிலவற்றுக்கும் அவ்வுலோகங்களுக்கும் இடையிலான இடப்பெயர்ச்சித் தாக்கங்கள் காட்டப்பட்டுள்ளன.
* $Y + X^{2+} \rightarrow Y^{2+} + X$
* $Y + Z^{2+} \rightarrow Y^{2+} + Z$
* $Z + X^{2+} \rightarrow Z^{2+} + X$
இவற்றினடிப்படையில் தாக்கத்தொடரில் அவை அமையும் ஒழுங்கைச் சரியாகத் தருவது,
(1) X, Y, Z (2) Y, Z, X (3) Z, X, Y (4) Z, Y, X

31. பட்டாணிக் கடலைத் தாவரத்தில் வித்தின் நிறம் மஞ்சள் ஆக இருத்தல் பச்சைக்கு ஆட்சி. மஞ்சள் நிற வித்துடைய தாவரங்களைப் பச்சை நிற வித்துடைய தாவரங்களுடன் இனக்கலப்புச் செய்து பெறப்படும் முதலாம் மகட் சந்ததித் தாவரங்களை இனங்கலப்புச் செய்து, பெறப்படும் இரண்டாம் மகட் சந்ததித் தாவரங்கள் தொடர்பாக எப்போதும் தவறாக இருக்கக் கூடியது.
(1) யாவும் மஞ்சள் நிற வித்துடைய தாவரங்களாக இருத்தல்
(2) யாவும் பச்சை நிற வித்துடைய தாவரங்களாக இருத்தல்
(3) மஞ்சள் : பச்சை 3 : 1 ஆக இருத்தல்.
(4) மஞ்சள் : பச்சை 1 : 1 ஆக இருத்தல்.

32. பின்வருவனவற்றுள் மூலக்கூற்று உயிரியல் தொழிநுட்பமாக அமைவது,
(1) எதிர்ப்புத் திறனுடைய கோதுமை உற்பத்தி (2) D.D.T தயாரிப்பு
(3) பென்சிலின் உற்பத்தி (4) யோக்கட் உற்பத்தி

33.





X முனையில் : $2OH^- - 2e \longrightarrow H_2O + "O"$


Y முனையில் : $2H^+ + 2e \longrightarrow H_2\uparrow$

| | X முனை | Y முனை | X இல் தாக்கம் | Y இல் தாக்கம் |
|---|---|---|---|---|
| (1) | அனோட் | கதோட் | ஒட்சியேற்றல் | தாழ்த்தல் |
| (2) | கதோட் | அனோட் | தாழ்த்தல் | ஒட்சியேற்றல் |
| (3) | அனோட் | கதோட் | தாழ்த்தல் | ஒட்சியேற்றல் |
| (4) | கதோட் | அனோட் | ஒட்சியேற்றல் | தாழ்த்தல் |

34. அணுக்கனவளவு குறைந்தது
(1) E
(2) F
(3) G
(4) H




35. தடைகளின் இணைப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.




இவற்றில் சமவலுத்தடை அதிகரிக்கும் ஒழுங்கில் அமைவது.
(1) A, B, C, D (2) B, A, C, D (3) C, D, B, A (4) D, A, C, B

36. A, B, C, D என்னும் சேர்வைகள் பற்றிப் பின்வரும் அட்டவணையில் காணப்படும் தரவுகளுக்கேற்ப அறை வெப்பநிலையிலே திரவமாக இருக்கும் சேர்வை யாது?
(1) A (2) B
(3) C (4) D

| சேர்வை | உருகுநிலை °C | கொதிநிலை °C |
|---|---|---|
| A | -119 | -110 |
| B | -60 | -10 |
| C | -60 | 100 |
| D | 253 | 3000 |

37. A, B எனப் பெயரிடப்பட்ட இரு ஒத்த முகவைகளிலே ஒரே வெப்பநிலையில் நீரின் சம கனவளவுகள் இருக்கின்றன. 70°C இற்கு வெப்பமாக்கப்பட்ட 500g திணிவுள்ள ஓர் இரும்புத் தராசுப்படியும் அதே வெப்பநிலைக்கு வெப்பமாக்கப்பட்ட 10g திணிவுள்ள ஓர் இரும்பு ஆணியும் முறையே A, B ஆகியவற்றினுள்ளே ஒரே கணத்தில் இடப்பட்டு, ஒத்த நிலைமைகளில் இருக்க விடப்பட்டிருந்தன. ஒரு நிமிடத்திற்குப் பின்னர் முகவைகளில் இருக்கும் நீரின் வெப்பநிலை பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றுள் யாது?
(1) A யின் வெப்பநிலை B யின் வெப்பநிலையிலும் கூடியது.
(2) A யின் வெப்பநிலை B யின் வெப்பநிலைக்குச் சமன்
(3) A யின் வெப்பநிலை B யின் வெப்பநிலையிலும் குறைந்தது.
(4) A, B ஆகியவற்றின் வெப்பநிலைகளை எதிர்வு கூறமுடியாது.

38. சீமெந்து தயாரிப்பில் சேர்க்கப்படும் ஜிப்சம்,
(1) சீமெந்து இறுகும் வேகத்தைக் குறைக்கின்றது.
(2) சீமெந்து இறுகும் வேகத்தை விரைவுபடுத்துகிறது.
(3) சீமெந்தை ஈரலிப்பாக்குகிறது.
(4) சீமெந்தை வன்மையாக்குகிறது.

இவ் வினாத்தாளின் பகுதி 11 எதிர்வரும் சனிக்கிழமை உங்கள் கல்விச்சுடரில் வெளிவரும்.

39. மனித இன்சுலின் பெறுவதற்குதவும் பற்றீரிய வகை,
(1) Bacillus thuringiensis (2) Escherichia coli
(3) Streptomyces griseus (4) Streptomyces aureofaciens

40. குடிநீரில் BOD பெறுமானம்
(1) அதிகமாக இருத்தல் வேண்டும். (2) குறைவாக இருத்தல் வேண்டும்.
(3) எவ்வாறும் இருக்கலாம். (4) போதியளவு இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



வடமராட்சிப் பிரதேசத்தில் 10 வருட சேவையைப் பூர்த்திசெய்த முன்பள்ளி ஆசிரியைகள் 48 பேர் யாழ்.வர்த்தக தொழிற்றுறை வேளாண் மகளிர் ஒன்றியத்தினால் கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் ஒன்றியப் பணிப்பாளர் எஸ்.ஜே.செல்வராஜா தலைமையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். ஒன்றியச் செயலாளர் செல்வி சைலஜா ரூபேந்திரன் முன்பள்ளி ஆசிரியையொருவருக்குச் சேவைச் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(218)*



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் நவராத்திரி தினப் பூசைகளைத் தொடர்ச்சியாகப் பத்து ஆண்டுகள் செய்து வருகின்ற பிரம்மஸ்ரீ க.மு.ஜெகநாதக்குருக்களுக்கு "வேத மந்திர வித்யா பூஷணம்" எனும் விருது அதிபர் கவிமணி க.ஆனந்தராசாவால் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிக் கச்சாய் பொது நூலகத்தில் சிறுவர் தின விழா அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபை நிர்வாக அலுவலர் சி.பத்நாதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்களைப் படத்தில் காணலாம். *(படம்:தென்னவன்)*



கலைமாமணி அண்ணாமலை மகாதேவனின் 'பொலிரிகல் வேர்ள்ட்' ஆங்கிலக் கவிதை நூலின் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படம்.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் ஆங்கிலப் பாட விரிவுரையாளர் த.மோகன் நூலை வெளியிட்டுவைக்க மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் இளைப்பாறிய கனிஷ்ட பிரதி அதிபர் திருமதி வல்லிபுரம் இராசம்மா முதல் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார்.

அருகில் நூலாசிரியர், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அ.விஜயநாதன், வெளியீட்டாளர் ம.மதியழகன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் சிறுவர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழக சுகாதார மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, முன்னாள் குருமுதல்வர் அருட்தந்தை எஸ். செல்வராசா, அதிபர் அருட்செல்வி எம்.ஜீவநந்தி ஆகியோர் சிறுவர்களால் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்பட்டபோது எடுத்த படம். *(படம்: லக்ஸ்மன்)*



சுன்னாகம் பஸ் நிலையத்தைச் சுன்னாகம் றோட்டறக் கழகத்தினர் வர்ணம் பூசி அழகுபடுத்தியுள்ளனர்.

றோட்டறக் கழக உறுப்பினர்கள் துப்புரவு செய்து வர்ணம் பூசும் பணியில் ஈடுபட்டு இருப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: நேசன்)*




சர்வதேச முதியோர் தின விழாவை முன்னிட்டுக் கைதடி அரச முதியோர் இல்லத்தில் முதியோர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

தம்பதிகளாக அங்கு தங்கியிருக்கும் முதியோர்கள் மாலை அணிவித்து யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, அருட்தந்தை தயாகரன் உள்ளிட்ட பலருடன் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். *(288)*



நெடுந்தீவு தென் இந்தியத் திருச்சபைப் பகற்பராமரிப்பு நிலையத்தின் சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவா, பேரருட் கலாநிதி பேராயர் டி.எஸ்.தியாகராஜா மற்றும் விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அசைவியக்கத்தின் அடித்தளமாக அன்றும் இன்றும் விளங்குவது சிக்கனமும் சேமிப்புமே

உலக சேமிப்பு தினம் நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இது உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் இது விசேட தினமாகும். எத்தகைய சூழ்நிலைக்குள் வாழ நேரிட்டாலும் அதனை எதிர்கொள்ள சிக்கனத்தையும் சேமிப்பையும் ஒரு கருவியாக கொள்பவர்கள் என்ற வகையிலும் இதன் அவசியம் உணரப்பட்ட நிலையிலும் இக்கட்டுரை பிரசுரமாகிறது.

தனிநபர்கள் தமது வருமானத்தில் சிக்கனத்தைப் பேணி தமது சேமிப்பை அதிகரித்து தத்தமது வாழ்வுக்கும், தேசத்தின் அபிவிருத்திக்கும் வித்திடும் நோக்குடன் பூகோள ரீதியில் வங்கிகளாலும், நிதிநிறுவனங்களாலும் அனுஷ்டிக்கப்படும் ஒரு விசேட தினம் என்ற வகையில் சேமிப்பு தினம் முக்கியத்துவம் பெறுகிறது. இது

## தொன்று தொட்டே எமது சமூகத்தின் மத்தியில் சிக்கனமும், சேமிப்பும் நடைமுறையில் உள்ளன

1924 இல் இத்தாலியில் நடைபெற்ற உலக வங்கியாளர் மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட விடயம். சேமிப்பு மீதான அவசியத்தை வலியுறுத்தி அதனை ஊக்குவிப்பது இத்தினத்தின் பிரதான நோக்காகும். உலக நாடுகள் பலவும் இந்நாளில் பல்வகை நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து சேமிப்பின் மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என்பதைப் போதித்து வருகின்றன.

தொன்று தொட்டு நம் சமூகத்தின் மத்தியிலும் சிக்கனமும் சேமிப்பும் நிலவியுள்ளமையை வரலாற்றாதாரங்கள் எடுத்து இயம்புகின்றன. சேமிப்பானது மனிதன் தோன்றிய காலத்தைப் போன்றே பழைமைமிக்கதொன்றெனவும் அது காலத்திற்குக் காலம் பல்வேறு விதமான சேமிப்பாக இருந்து வந்துள்ளது என்பதையும் சமூகவியலாளர்களும் வரலாற்றாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். ஆரம்ப கால சேமிப்பு முறைகள் நமக்குச் சிக்கனச் சிந்தனையை ஏற்படுத்துவதோடு சேமிப்பானது மனித வாழ்வில் சமுதாய பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

சேமிப்பு பற்றி 1611 இல் பிரான்ஸ் நாட்டவரான ஹியூக்டெலர்ஸ் (Hugh Dallas) என்பவர் முதன்முதலில் ஒரு கருத்திட்டத்தை எழுத்துருவில் முன்வைத்திருந்தார். அதே போல இன்றைய சகாப்தத்தின் வங்கியென ஏற்றுக்கொள்ளப்பட்ட முதலாவது வங்கி 1778 இல் ஜேர்மனியில் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அடுத்து 1810 இல் இங்கிலாந்தில் சேமிப்புக்கென வங்கி ஒன்று நிறுவப்பட்டதாகவும் மேல் நாட்டு வரலாறுகளிலிருந்து அறிய முடிகின்றது. காலவோட்டத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு முதலீட்டாக்கம் அவசியம் எனும் எண்ணக்கரு வலுப்பெற்ற நிலையில் படிப்படியாக வங்கித் தேவைகளின் அவசியம் உணரப்படலானது.

நம் நாட்டிலும் 1785 இல் ஆட்சி புரிந்த ஒல்லாந்து தேசாதிபதியான வான்டிற் கிறாப் (Wandet Graff) என்பவரால் தாள், நாணயங்கள் வெளியிடப்பட்டமைக்கு சான்றுகளுண்டு. அதன் பின் படிப்படியாக வங்கிகள் நிறுவப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டு மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்துதல், அதனை ஊக்குவித்தல், சிக்கனத்தை வளர்த்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், பணவீக்கத்தை கட்டுப்படுத்தல், வேலை வாய்ப்புக்கள் உருவாக்குதல் போன்றன அவற்றில் குறிப்பிடத்தக்கன.

பொதுவாக இலங்கையிலுள்ள வங்கிகளையும், நிதிநிறுவனங்களையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம். மத்திய வங்கி உரிமம் பெற்ற வணிக வங்கி, உரிமம் பெற்ற விஷேட வங்கிகள், வியாபார வங்கிகள், பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள், கடன் வழங்கும் நிதிநிறுவனங்கள், ஒப்பந்த சேமிப்பு நிறுவனங்கள் (EPF, ETF), முதல் நிலை வணிகவங்கிகள், ஏனைய விஷேட நிதிச் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் என்பனவாகும். இதில் மத்திய வங்கியானது ஒரு நாட்டின் அரசாங்கத்தின் வங்கியாகவும் நாட்டின் தலைமை நிறுவனமாகவும் தொழிற்படுகின்றது. இது பொதுமக்களுடன் நேரடித் தொடர்பினை கொண்டிருப்பது இல்லை. இவை பொருளாதார உறுதி, நிதியியல் உறுதித்தன்மையினை பேணுவதை நோக்காகக் கொண்டவையாகும்.

இருப்பினும் நமது நாட்டின் மூலதனச் சேமிப்பு பரம்பலை வெற்றிகரமாக நிறைவேற்றி, மக்களின் சேமிக்கும் ஆற்றலை மேம்படுத்தி, அச்சேமிப்பு முதலீட்டினூடாக தேசிய உற்பத்தியை பல துறைகளினூடாகவும் புகுத்தி, சேமிப்புச், சிந்தனை உணர்வை மேலும் பரிணமிக்க செய்வதும் இந்த வங்கிகளே.

மக்களின் சேமிக்கும் ஆற்றலை விருத்திபுறச் செய்து சேமிக்கும் ஆற்றலை தூண்டும் இவ்வங்கிகள் நாட்டின் நிதிச்சந்தையில் சிறப்புறு நிறுவனங்களாக பரிணாமம் பெற்றுக் கொண்டன. இவற்றினை சீர் தூக்கி பார்க்குமிடத்து வங்கிகள் நாட்டுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் எனக் கருதினால் மிகையாகாது.

நம் நாகரிகமும் கலாசாரமும் சேமிப்பின் அவசியத்தையும் அதன் பயனையும் ஏற்றே வந்துள்ளன. அபிவிருத்தியை நோக்கி நாமும் நாடும் முன்நகர வேண்டு மாயின் உள்நாட்டு சேமிப்பு உயர வேண்டும். எமது நாட்டுச்



சேமிப்பு உயராத வரை நாம் அந்நிய நாட்டு உதவிகளிலேயே தங்கியிருக்கும் நிலை ஏற்படும். இது நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார சுபீட்சத்திற்கும் தடையாகும். இதனால் தான் தனியொருவர் வாழ்வாதார மட்டத்திலிருந்து சர்வதேச மட்டம் வரையான ஓர் அறநெறியாகச் சேமிப்பானது விளங்கி வருகின்றது. ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார அபிவிருத்தியில் தேசிய சேமிப்பானது பெரும் பங்கு வகிக்கின்றது. எனவே தான் நாடுகளின் தேசிய உற்பத்தியில் தேசிய சேமிப்பு வீதம் என்பது ஒரு குறிகாட்டியாக கொள்ளப்படுகின்றது. சமூகத்தில் நிலவும் வறுமை, நிதிமுடக்குகளிலிருந்து சமூகத்தினர் நிவாரணம் பெற சேமிப்பு அவசியமாகின்றது. தேசிய பொருளாதாரத்தை பொறுத்தவரை பொருளாதார அபிவிருத்திக்கும் பொருளாதார சுதந்திரத்திற்கும் இச்சேமிப்பே ஆணி வேராய் அமைகின்றது.

மேலும், நவீன பொருளாதார முறைமைகளும் நமக்குச் சேமிப்பைத் தூண்டுகின்றன. வங்கிகள் வழங்கும் உயர் வட்டி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை போன்றனவற்றை வங்கிகள் உறுதியளிப்பதால் சேமிப்பின் மீது மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அரச அங்கீகாரம்,

இ.சுரேருபன்

பாதுகாப்பு, சலுகைகள் என்பனவும் மக்களிடையே சேமிப்பு பற்றிய நம்பிக்கையை வளர்த்துள்ளன. ஆதலால் சேமிப்பின் அவசியத்தை நன்குணர்ந்து பலமானதும், வளமானதுமான எதிர்காலத்திற்கு இன்றே அத்திபாரம் இடுவோமாக!.

**திருமண சேவை**

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. முன்பு எம்மிடம் பதிவு செய்தவர்களும் தொடர்பு கொள்ளவும். பதிவு இலவசம். 1977, ரோகிணி, உயரம் '5' 11, அரச உத்தியோக மணமகளுக்கு அரச உத்தியோக வரன் தேவை.

துர்க்கா திருமண சேவை
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
021 4591417

**வாடகைக்கு/விற்பனைக்கு**

ரெஜிபோமினால் வடிவமைக்கப்பட்ட பலதரப்பட்ட வடிவங்களிலும் வண்ண மயமாக்கப்பட்ட ஐசிங் கேக்,BOUQUET வகைகள், பிறந்ததினம், REGISTRATION, திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா போன்ற பலவகையான தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் குறைந்த வாடகைக்கும் விற்பனைக்கும்.

உடன் நாடுங்கள்
வேல் மிக்சர்
இல. 57,K.K.S. வீதி,கொக்குவில்.
T.P:- 0776701461

**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அன்னையின் மடியில் 05 ★ 08 ★ 1968



ஆண்டவன் மடியில் 01 ★ 11 ★ 2006

(79560)

**அமரர் திருச்செல்வம் சுரேந்திரன்** (சுரேன்)

எமது அருமையான அப்பா - உங்கள்
புன்னகை பூத்த முகமும் - கலகலப்பான
குரலும் எங்கேயப்பா?

பிள்ளைகள்: சுவிற்றி, சுஜான்

உன்னைப் புடமிட்டேன் ஆனாலும் வெள்ளியைப் போலல்ல
உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்.
(ஏசாயா 48:10)

12/15, கெனடி வீதி,
நாவாந்துறை.

குடும்பத்தினர்.

**நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவலைகள்**

தோற்றம் 11 * 10 * 1937
மறைவு 01 * 11 * 2007





தோற்றம் 18 * 05 * 1942
மறைவு 05 * 02 * 2007

**அமரர் கணபதி நாகலிங்கம்** **திருமதி நாகலிங்கம் இராசமணி**

திதி: ஸப்தமி [05.11.2008]

ஆண்டு ஒன்று ஆகிடினும் ஆறிடுமோ எங்கள் மனம்
நீங்கள் இல்லாத வாழ்வினை நினைத்துப் பார்க்க முடிகிறதா?
துன்பக்கடலில் மூழ்கியே துவண்டு துடிக்கிறோம்; துன்பங்கள் களைந்திடவே
துடுப்பாய் எங்களை வழி நடத்தும் எம் அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பு முகத்தை எங்கள் உள்ளங்கள் என்றும் எப்பொழுதும் மறந்ததில்லை.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(79588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் முகம்



கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றிவரும் செல்வி சீவரெட்ணம் உருத்திரப்பிரியா, கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கு இடையிலான ஆக்கத்திறன் போட்டியில் பாடலாக்கத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையால் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

* * *



வலி.மேற்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினரான இரத்தினம் பொன்ராசா சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஆரம்பக் கல்வியை வட்டு.சுப்பிரமணிய வித்தியா சாலையிலும் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பயின்றார்.

இவர் அரச சேவையில் நீண்டகாலம் பணி செய்தவர். அக்காலத்தில் அரச எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் கிளிநொச்சிப் பிரதேச ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டார். இவர் தற்போது வட்டுக்கோட்டை ஸ்ரீகணேச வாசிகசாலைத் தலைவராகச் செயற்படுகின்றார்.

* * *



தீவகம் வடக்கில் சோட்டொகான் கராத்தே சங்கம் ஊடாகத் தற்காப்புக் கலையை அறிமுகப்படுத்தி இளம் சமூகத்துக்கு உற்சாகமும் ஊக்கமும் வழங்கி வளப்படுத்தி வருகின்றார் குணசேகரம் ஜெயனேந்திரன்.

இவர் தேவா கலை கலாசார மன்றத் தின் போஷகராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இவரது சேவையைப் பாராட்டி தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை 'கலாவித்தகன்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

# பத்திரிகைச் சுதந்திரம் இலங்கையில் மோசம்!

### சர்வதேச ஊடக அமைப்புகள் கவலை

கொழும்பு, நவ.1

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் மிக்வும் மோசமடைந்துள்ளதாக சர்வதேச பத்திரிகை சுதந்திர அமைப்புகள் கூட்டாக அச்சம் வெளயிட்டுள்ளன.

கடந்த ஒரு வாரகாலமாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு உட்பட ஐந்து அமைப்புகளே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளன.

இந்த அமைப்புகள் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கைக்கு கடந்த 25 ஆம் திகதி முதல் 29ஆம் திகதிவரை விஜயம் மேற்கொண்ட சர்வதேச பத்திரிகை சுதந்திர குழுவினர் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தின் நிலை குறைவடைந்துள்ளதைக் கண்டறிந்துள்ளனர்.

தொடர்ச்சியாக தாக்குதல்கள், ஆள்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள் போன்றன காணப்படுகின்றன. எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பின் தரப்படுத்தலில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. உலகின் வேறு எந்த ஜனநாயக நாட்டையும்விட இலங்கையில் ஊடக சுதந்திரம் மிகவும் மோசமாகவுள்ளது.

ஜனநாயக நாடொன்றில் பத்திரிகையாளர்கள் எழுதிய விடயங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்து நாம் அச்சமடைந்துள்ளோம்.

ஜே.எஸ்.திஸநாயகம், ஜசிகரன் மற்றும் வளர்மதி ஆகியோர் கடந்த மார்ச் மாதம் முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள ஆபத்தான முன்னுதாரணம் குறித்து சர்வதேசக் குழுவினர் அச்சமடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் தொடரும் மோதல் குறித்து சுதந்திரமாகக் கருத்து வெளியிட முயன்ற பத்திரிகையாளர்களுடன் பத்திரிகை நிறுவனங்களும் தாக்கப்பட்டுள்ளன. யுத்தம் குறித்து பொதுமக்களுக்குத் தெரிய வரக்கூடிய விடயங்களை மட்டுப்படுத்துவதே இதன் நோக்கம்.

**தகவல் அறியும் உரிமை மீறப்படுகிறது**

இது பொதுமக்களுக்குத் தகவல்களைப் பெறுவதற்கு உள்ள உரிமையை மீறும் செயலாகும்.

வடகிழக்கிலுள்ள ஊடகங்கள் மிக மோசமான பாதுகாப்பின்மையால் பல்வேறு வடிவங்களில் கஷ்டங்களை அனுபவிக்கின்றன.

யுத்தம் இடம்பெறும் பகுதிகளுக்கு ஊடகர்கள் செல்வதற்கு கடும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் தெரிவிக்கும் தகவல்களையே மீள் பிரசுரம் செய்ய வேண்டிய நிலை உள்ளது.

மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகள் சுதந்திரமான மற்றும் விமர்சனத்துடன் கூடிய செய்திகளைத் தடுப்பதற்காக தொடர்ச்சியாக ஊடகர்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கருத்துச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் கடுமையாகக் கட்டுப்பத்தப்படுகின்றன.

அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் ஊடகங்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக வெளியிடும் வன்முறைகலந்த வார்த்தைகள் குறித்து அச்சமடைந்துள்ளோம்.

சுதந்திர ஊடகங்களையும் பத்திரிகையாளர்களையும் அரசு ஊடகங்களும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமும் தொடர்ந்தும் மோசமாக சித்திரிப்பது குறித்தும் கவலை அடைந்துள்ளோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வாடிக்கையாளர்களுக்குத் திருப்திகரமான சேவை; அதுவே வங்கிகளின் வெற்றிக்குக் காரணம்

### முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் கூறுகின்றார்

மந்திகை, நவ.1

வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களுக்குத் திருப்தியான சேவைகளை வழங்குவதன் மூலமே வங்கிகள் வெற்றி அடைய முடியும். வட பிராந்தியத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டே செயற்பட்டு வருகின்றன. இன்று இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர சேவையை அவர் ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



மேற்கண்டவாறு குறிப்பிட்டார் இலங்கை வங்கியின் முன்னாள் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம்.

பருத்தித்துறை இலங்கை வங்கியின் தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர சேவையைச் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இவ்விழா இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை சிவன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.சிவநேசக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

இன்று ஆரம்பிக்கப்பட்ட தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திர சேவையின் மூலம் வாடிக்கையாளர்கள் இலகு சேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியேற்பட்டுள்ளது. இச்சேவையை வாடிக்கையாளர்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வங்கிகள் தேவைக்கேற்ப தரம் உயர்த்தப்பட வேண்டும். முன்பு வங்கிகளைத் தரமுயர்த்துவதற்கு அதன் வைப்புக்களின் நிலைகளே கவனிக்கப்பட்டன. ஆனால் தற்போது வங்கியின் அறவிட முடியாக் கடனும் கவனத்திலெடுக்கப்படுகின்றது. இதனால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன.

பருத்தித்துறை இலங்கை வங்கியில் வைப்புகள், சொத்துக்கள் சிறப்பாக உள்ளன. செயற்பாட்டு நடவடிக்கைகள் திறமையாக உள்ளன. அறவிட முடியாக் கடன்களிலேயே பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த அறவிடமுடியாக் கடன் சீர்செய்யப்பட்டதும் நிலைமை மாற்றமடையும். இந்த அறிவிட முடியாக் கடன் சம்பந்தமாகவே இந்த வங்கியைத் தரமுயர்தல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. வங்கியைத் தரம் உயர்த்த காலதாமதம் ஏற்பட்டாலும் இந்த வங்கியின் முகாமையாளர் வெகு விரைவில் மேற்றரக்கிளை முகாமையாளர் தரத்திற்குப் பதவி உயர்வு பெறுவார்.

இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ். உல கநாதன், யாழ். அதிமேற்றரக்கிளை முகாமையாளர் எஸ்.ஜெஜேந்திரா உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்.

18+ கணக்கு வைத்திருப்பவரான திருமதி எஸ்.பிரதீபனுக்கு "தங்க நாணயம்" பரிசில் வழங்கப்பட்டது. (202-218)

# விமானத் தாக்குதலைக் குறைக்க இந்தியாவோடு அரசு உடன்பட்டதா?

### ஜே.வி.பி. தலைவர் சந்தேகம்!

இந்திய வெளிவிகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் பஸில் ராஜபக்ஷவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையின் விளைவாக வன்னியில் புலிகள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் விமானத் தாக்குதல் நிறுத்தப்பட்டு விட்டது. பதிலுக்கு புலிகளின் விமானத் தாக்குதல் தொடங்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறினார்.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கை - இந்திய இணக்கப்பாட்டைத் தொடர்ந்து புலிகள் மீதான விமானப்படையினரின் தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது அல்லது குறைவடைந்துள்ளது. பதிலுக்கு புலிகளின் விமானத் தாக்குதல் தொடங்கியுள்ளது.

இந்தியா இலங்கைக்கு வழங்கிய ராடர் கருவிகள் தரமானவையாக இருந்திருந்தால் தாக்குதல் நடத்த வந்த புலிகள் விமானம் சிக்கியிருக்கும்.உண்மையில் புலிகளை உருவாக்கியது இந்தியாதான். அத்தோடு புலிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கி ஆயுதங்களையும் கொடுத்தது. இப்போது புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தை நிறுத்துவதற்கும் இந்தியா கடும் முயற்சிகளை எடுத்து வருகின்றது - என்றார். (த-07)

# சமுர்த்திக் குடும்பப் பிள்ளைகளுக்கு கல்வி அமைச்சு புலமைப்பரிசில்

கொழும்பு, நவம்பர்.1

சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவது பற்றி கல்வி அமைச்சு ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

இந்த வருடம் இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் திட்டம் அமையும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித் துள்ளார். இதன்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்திகளைப் பெற்றுள்ள பிள்ளைகள் 2000 பேர் கல்வி அமைச்சின் பரிசிலான 2400 ரூபாவை மாதந்தோறும் பெறுவார்கள்.

அடுத்த ஆண்டு ஆரம்பமாகவிருக்கும் இப்பரிசில் திட்டம் 10 மாதங்களுக்கு நீடிக்கும் என்று தெரிகின்றது. (ப)




நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும் 'நெல்லிக்கனி' நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினர்கள் ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கல்வியில் சாதனை படைத்தவர்களுக்கான விருதை நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வழங்குவதை இரண்டாவது படத்திலும்-

'நெல்லிக்கனி' நூலின் முதல் பிரதியை பிரதம வி[illegible] நெல்லியடி செல்லமுத்தூஸ் நிறுவன உரிமையாளர் ச.சண்முகசுந்தரம் பெற்றுக் கொள்வதையும் அருகில் வித்தியாலய அ[illegible] மூன்றாவது படத்திலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2009ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 01.01.2009 தொடக்கம் 31.12.2009ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| இல. | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வற்வரி தவிர) | மாத வாடகை (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் உட்பட) | 1,500.00 | 15,000.00 | 3,900,000.00 | - |
| 02 | மல்வம் ஆலடிச்சந்தை (அரசினர் மருந்தகம் அருகில்) | 500.00 | 10,000.00 | 111,000.00 | - |
| 03 | சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 750,000.00 | 250.00 |
| 04 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை | 750.00 | 10,000.00 | 150,000.00 | 250.00 |
| 05 | கருவாட்டுக்கடை இல.3 | 500.00 | 5,000.00 | 28,000.00 | 150.00 |
| 06 | கருவாட்டுக்கடை இல.4 | 500.00 | 5,000.00 | 28,000.00 | 150.00 |
| 07 | கருவாட்டுக்கடை இல.5 | 500.00 | 5,000.00 | 28,000.00 | 150.00 |
| 08 | கோழிக்கடை இல. 6 | 500.00 | 5,000.00 | 79,000.00 | 150.00 |
| 09 | கோழிக்கடை இல. 7 | 500.00 | 5,000.00 | 45,000.00 | 150.00 |
| 10 | கோழி உரித்தல் | 500.00 | 5,000.00 | 47,000.00 | 150.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் சந்தை (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம் உட்பட) | 1,500.00 | 15,000.00 | 3,900,000.00 | - |
| 02 | இணுவில் பொதுச் சந்தை | 500.00 | 5,000.00 | 45,000.00 | - |
| 03 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கோத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்பட வேண்டும்) | 1,000.00 | 10,000.00 | 130,000.00 | - |
| 04 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கோத் தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்பட வேண்டும்) | 750.00 | 10,000.00 | 63,000.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 01 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 85,000.00 | - |
| 02 | ஏழாலை பொதுச்சந்தை | 500.00 | 5,000.00 | 15,000.00 | - |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 17.11.2008 பி.ப 2.00 மணிவரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல் : 18.11.2008 நண்பகல்12.00மணிவரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படுதல் : 18.11.2008 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ***செயலாளர், வலி.தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்*** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை ***பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்*** என முகவரியிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
5. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச்சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
7. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் ரூ.2,000,000.00 (ரூபா இருபது லட்சம்) இற்கு குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்.
9. தெரிவு செய்யப்படும் சந்தைச் சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பகுதியை 26.11.2008 ஆம் திகதிக்கு முன்செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.
10. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
11. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
12. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்.
30.10.2008

திருமதி [illegible]
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.1

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆசிரியர் ச. கிருஷ்ணன், மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய கே.வி. இராசதுரை ஓய்வு பெற்றதையடுத்து புதிய அதிபராக ச.கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(202-207)

## வைத்தியர் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். போதனா வைத்தியசாலையில் பல் வைத்திய நிபுணராக சேவை புரிந்துவரும் டாக்டர் க.கவிதாம்பிகை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(202-300)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.1

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஜி.சீ.ஈ உயர்தரத்தில் உயிரியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு இன்று நடைபெற இருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(202)


## சிங்கப்பூரில் பணிபுரிய வீட்டுப்பணிப்பெண் தேவை

23 வயதுக்கு மேற்பட்ட விதவைகள், ஆதரவற்றவர்கள், தனியாள்கள் விரும்பத்தக்கது. G.C.E. ஆங்கில சித்தி அவசியம். அண்மையில் எடுத்த பாஸ்போட் சைஸ் போட்டோவுடன் மருத்துவச் சான்றிதழ், தகுதி வாய்ந்த நற்சாட்சிப் பத்திரம் அனுப்புதல் வேண்டும். ஏஜென்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

தொடர்புகட்கு:- **NOVENA,**
P.O.Box 206,
SINGAPORE 913016.


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பர்
# குழந்தைவேலு

மண்ணில்
19 - 06 - 1928

விண்ணில்
07 - 10 - 2004

திதி: திருதியை

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
மறந்திடுமோ எம் நெஞ்சம்
வாழ்கின்றோம் உன் நினைவில்
மீண்டும் வந்திடுவீரா ஐயா

என்றும் உம் நினைவுடன்:
சிவக்கொழுந்து (மனைவி), கிருபைராசா (மகன் - கனடா), மகள், மருமகன், பிரதீபன் (பேரன் - லண்டன்).

நல்லையம்புலம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(C/555133)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாமிப்பிள்ளை பொன்னம்பலநாதன்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 1/3-27, ருத்திரா மாவத்தை ,வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி பொ.சிவகாமிப்பிள்ளை (30.10.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலநாதனின் அன்பு மனைவியும் Dr.மனோகரன், செல்வி மனோகரி (ஓய்வுபெற்ற HNB வங்கி ஊழியர்) ஆகியோரின் அன்புத் தாயும் Dr.ரஞ்சியின் மாமியாரும் ஹரிகரனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (01.11.2008) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*1/3 - 27, ருத்திரா மாவத்தை,*
கொழும்பு - 06
T.P: 2363004

தகவல்:
மனோகரி (*மகள்*).

(C/555157)

# 8ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
05 ★ 03 ★ 1932



மறைவு
24 ★ 10 ★ 2008

அமரர் **சோமசுந்தரம் கணேஷலிங்கம்**
**(இளைப்பாறிய கொத்தணி அதிபர், கைதடி)**

எமது குடும்பத்தலைவர் திடீரென நோயுற்றவேளையில் அவருக்கு கனிவுடன் சிகிச்சை அளித்த யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது தந்தை சிவபதமடைந்தபோது, எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி, பத்திரிகை, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிள்ளைகள் கொழும்பில் இருந்து உரிய நேரத்தில் வந்து இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள ஆவன செய்த Expo Aviation நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகள்.

எமது தந்தையாரின் இறுதிக்கிரியைகளின்போது சகல வழிகளிலும் கைகொடுத்து உதவிய நண்பர்கள்,உறவினர்கள், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட, மருத்துவ [illegible]த்தினர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

[illegible] ஒழுங்கை,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

(79574)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈழத்தமிழர்கள் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண ராஜீவ்-ஜே.ஆர். ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டும்

## கே.வி. தங்கபாலு தெரிவிப்பு

கமுதி, நவ. 01

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண ராஜீவ்காந்தி-ஜெயவர்த்தன முன்னிலையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவும் அந்த மண்ணில் அவர்களுக்குச் சம உரிமை பெறவும் வழி வகை செய்யப்பட்டு உள்ளது. அதை நிறைவேற்ற வலியுறுத்தி வருகிறோம்.

- இவ்வாறு தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் குரு பூஜை விழாவையொட்டி நேற்றுமுன்தினம் காலை பசும்பொனில் உள்ள தேவர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு-



ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் தெளிவாக இருக்கிறது. நாங்கள் ஒருபோதும் வன்முறைக்கு வழி விடமாட்டோம். இலங்கைப் பிரச்சினைக்கு வன்முறை சரியான தீர்வு அல்ல. காந்திய வழியில் தீர்வு காணவே மத்திய அரசு விரும்புகிறது. அங்குள்ள அப்பாவி மக்கள் அங்கு நிலையாக வாழவே நாங்கள் விரும்புகிறோம்.

ராஜீவ்காந்தியை விடுதலைப் புலிகள் கொன்றதை எங்களால் மறக்கவும் மன்னிக்கவும் முடியாது. இதில் தெளிவாகவே உள்ளோம். ஆனால் அங்குள்ள தமிழர்களின் உரிமைகளைக் காக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்க அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை நிறைவேற்ற மத்திய அரசு உறுதுணையாக உள்ளது.

ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன முன்னிலையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கவும் அந்த மண்ணில் அவர்களுக்குச் சம உரிமை பெறவும் வழி வகை செய்யப்பட்டு உள்ளது. அதை நிறைவேற்ற வலியுறுத்தி வருகிறோம். இதுபற்றி சோனியா காந்தியும், பிரதமர் மன்மோகன் சிங்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விளக்கியுள்ளனர் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# ஈழத் தமிழரைக் காப்பாற்ற கருணாநிதி இலங்கை சென்று பேச்சு நடத்தவேண்டும்

## சரத்குமார் வேண்டுகோள்



திருச்சி, நவ. 01

ஈழத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக இலங்கை சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் முதல்வர் கருணாநிதி பேச்சு நடத்த வேண்டும்.

- இவ்வாறு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும் நடிகருமான சரத்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

ஈழத்தமிழர்களுக்கு அமைதி கிடைக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகள் இதற்கு நிலையான தீர்வு காணவேண்டும். அன்று இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உணவு, உடைகளை எடுத்துச் செல்ல முயன்ற பழ.நெடுமாறனைத் தடுத்துக் கைதுசெய்த தமிழக அரசு இப்போது அதே வேலையைச் செய்கிறது. இந்த விடயத்தில் தமிழக அரசின் நிலை என்ன என்பதைத் தெளிவாகக் கூற வேண்டும்.

அமைதிப் பேச்சு நடத்த இலங்கைக்குச் செல்லும் நோர்வேத் தூதுக்குழுவுடன் தமிழகக் குழுவும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த தமிழக முதல்வர் வரலாம் என இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. முதல்வர் அங்கு சென்று பேச்சுநடத்த வேண்டும்.

தமிழர்களுக்கு, தமிழகத்திலிருந்து உணவு, மருந்துகளைக் கொண்டுசெல்ல தனிக்குழு அமைக்கவேண்டும். நிவாரணப் பொருள்கள் உரியவர்களுக்குக் கிடைத்தனவா என அறியக் கண்காணிப்புக் குழுவை அரசு அமைக்க வேண்டும் - என்றார்.

# பசும்பொன் தேவர் நினைவிடத்தில் ஜெயலலிதாவின் கார் மீது கல்வீச்சு



அழகிரி

மதுரை, நவ.01

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தியபோது ஒரு கும்பல் திடீர் கல்வீச்சில் ஈடுபட்டது. இதில் அவரது கார் உட்பட 6 கார்கள் சேதமடைந்தன. 3 பொலிஸார் உட்பட 10 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கூட்டத்தைக் கலைத்தனர்.

முத்துராமலிங்கத்தேவரின் 101வது ஜெயந்தி விழா மற்றும் 46ஆவது குருபூஜையில் பங்கேற்க தனிவிமானத்தில் சென்னையிலிருந்து மதுரைக்கு மதியம் 2.45 மணிக்கு ஜெயலலிதா வந்தார். அங்கிருந்து ஹெலிகொப்டரில் பசும்பொன் சென்று தேவர் நினைவிடத்துக்கு காரில் வந்தார். தேவர் நினைவிடம் அருகே கட்டுக்கடங்காத கூட்டம் இருந்தது.

சிறப்பு நுழைவாயில் வழியாக நினைவிடத்துக்குள் ஜெயலலிதா சென்றபோது ஒரு கும்பல் நினைவிடத்துக்கு வெளியே திடீரென கல்வீச்சில் ஈடுபட்டது. பொலிஸார் மீதும் கற்கள் வீசப்பட்டன.

இதையடுத்து பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். அந்தப் பகுதி போர்க்களம்போல் காட்சியளித்தது. பின்னர் நிலைமை கட்டுக்குள் வந்தது. கல்வீச்சில் ஜெயலலிதா வந்த கார் உட்பட 6 கார்கள் சேதமடைந்தன.

வெளியே வந்த ஜெயலலிதா, காரில் இருந்தபடியே செய்தியாளர்களிடம் கூறுகையில் -

இந்தத் தாக்குதல் தி.மு.கவின் திட்டமிட்ட சதி. இந்தத் தாக்குதல் பொலிஸாரின் அலட்சியத்தால்தான் நடந்துள்ளது. 17 ஆண்டுகளாக மிரட்டலில்தான் வாழ்கிறேன். இந்தத் தாக்குதல் குறித்து நீதி விசாரணை கேட்டு நீதிமன்றில் முறையிடுவேன் - என்றார்.

பசும்பொனில் தொண்டர்களிடையே ஜெயலலிதா பேசுகையில் -

நான் தேவர் குருபூஜைக்கு வர முடியாதோ என்று கவலைப்பட்டேன். விமானம் ஏறும் போது கால் இடறி 6 அங்குல நீளத்திற்கு பலமாக அடிப்பட்டது. உடனே வீடு திரும்பினேன். விழாவிற்குப் போக வேண்டாம் என்று டாக்டர்கள் அறிவுறுத்தினர். ஆனால், நான் கேட்கவில்லை. 3 மணி நேர தாமதத்திற்கு பின் இங்கு வந்துள்ளேன். தாங்க முடியாத கால் வலி இருந்தது.

யாருக்கும் பயப்படாமல் இங்கு வந்தேன். எனது கார் கண்ணாடியை அடித்து நொறுக்கிய தீய சக்திகளைத் தூக்கி எறிய வேண்டும். தேவர் நினைவிடத்தில் உங்கள் சகோதரியாக நின்று சொல்கிறேன் - என்றார்.

### அழகிரியின் உத்தரவில் தாக்குதல்

சென்னை திரும்பியதும் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை வருமாறு-

பசும்பொன் கிராமத்துக்கு சென்றபோது, வன்முறைக் கும்பல் என் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியது. முதல்வர் மகன் மு.க.அழகிரியின் உத்தரவின் பேரிலேயே இக்கொலை வெறித்தாக்குதல் நடைபெற்றது என்றும், இந்தச் சதிச் செயல் உளவுத்துறைக்குத் தெரிந்ததுதான் நடைபெற்றிருக்கிறது - என்றுள்ளது.

# சீமான், அமீர் நேற்று விடுவிப்பு மேளதாளங்களுடன் வரவேற்பு

மதுரை, நவ. 01




மதுரை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகிய இருவரும் நேற்று பிணையில் விடுதலையாகி வெளியே வந்தனர். அவர்களை இயக்குநர்கள் பாரதிராஜா, பாக்கியராஜ், சேரன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து கடந்த 19ஆம் திகதி இராமேஸ்வரத்தில் தமிழ்த் திரையுலகம் சார்பில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது இந்திய இறையாண்மைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும், பிரிவினைவாதத்தைத் தூண்டும் வகையிலும், தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்தும் பேசினர் என இயக்குநர்கள் சீமான், அமீரை இராமநாதபுரம் கியூப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் இருவரும் இராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மதுரை மத்திய சிறைச்சாலையில் 15 நாள்கள் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இருவரின் சார்பில் பிணை கேட்டு கடந்த 28ஆம் திகதி இராமநாதபுரம் விரைவு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி இருவருக்கும் பிணைவழங்கினார்.

இதைத்தொடர்ந்து நேற்றுக்காலை 10 மணியளவில் இயக்குநர்கள் அமீர், சீமான் ஆகிய இருவரும் சிறையிலிருந்து விடுதலை ஆனார்கள். மதுரை மத்திய சிறையிலிருந்து வெளியே வந்த அவர்கள் இருவரையும் மேளதாளம் முழங்க மாலை அணிவித்து இயக்குநர்கள் பாரதிராஜா, பாக்கியராஜ், சேரன் ஆகியோர் வரவேற்றனர்.

சிறையிலிருந்து வெளியே வந்த சீமானும், அமீரும் இந்தப் பிரச்சினையின்போது, தங்களுக்குப் பின்னால் நின்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்தனர்.

# தமிழர்களைக் குறிவைத்து தாக்குகின்றது இராணுவம்

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

இராமேஸ்வரம், நவ. 01



தமிழர்களைக் குறிவைத்து இலங்கை இராணுவம் தாக்குகின்றது என்று இராமேஸ்வரம் சென்ற இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு இலங்கை, மன்னார்ப் பகுதியைச் சேர்ந்த 32 அகதிகள் கடந்த புதனன்று இரவில் இரு படகுகளில் புறப்பட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் வந்திறங்கினர்.

அகதிகளை இறக்கிவிட்ட இரண்டு படகுகளும் திரும்பின. இரவு முழுவதும் கடற்கரையில் இருந்த அகதிகள் காலையில் தனுஷ்கோடி பொலிஸ் நிலையம் வந்தனர். பொலிஸார் விசாரணை செய்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த சரஸ்வதி (வயது 53) கூறுகையில், ''இலங்கையில் ஒட்டுமொத்த தமிழர்களையும் குறிவைத்து இராணுவம் தாக்குதல் தொடுக்கிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் குடியிருந்தபோதும் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. இதனால் பல நாள்கள் மன்னார் காடுகளில் மறைந்திருந்து படகில் இங்கு வந்தோம்'' - என்றார்.

# வைகோவை சிறையில் சந்தித்தார் நெடுமாறன்




சென்னை, நவ. 01

புலிகளுக்கு ஆதரவாகப் பேசினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, அவைத் தலைவர் கண்ணப்பன் ஆகியோரை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

ஈழப் பிரச்சினை கடும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் இருவரும் பிணையில் வெளிவரவேண்டும் என்று அப்போது பழ. நெடுமாறன் அவர்களை கேட்டுக் கொண்டார்.

இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிக்கும் விதமாக [illegible] 23ஆம் திகதி இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களது கைதுக்கு நெடுமாறன் ஏற்கனவே கண்டனம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் தமிழக அரசின் செயற்பாடு 'கம்மி'

## பா.ஜ.க. குற்றச்சாட்டு

கமுதி, நவ.01

குண்டு மழைக்கு நடுவினில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் தமிழக அரசின் நடவடிக்கை திருப்தியானதாக - போதுமானதாக அமையவில்லை - என்று பா.ஜ.கவின் தேசிய செயலர் திருநாவுக்கரசர் குற்றம் சாட்டியுள்ளார்.

பசும்பொனில் தேவர் சமாதிக்கு நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்திய பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, இலங்கைக்கு ஆயுத உதவிகள் வழங்கப்படவில்லை என்று கூறுவது சுத்தப்பொய். இப்பிரச்சினை குறித்து ஏற்கனவே நான் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினேன். அப்போது இராணுவ அமைச்சர், ராடர் போன்ற இலகுரக கருவிகளையே இலங்கைக்கு வழங்குகிறோம் என்று தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்க வேண்டும். இப்பிரச்சினையில் தமிழக அரசின் நடவடிக்கை திருப்தியாக இல்லை- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவும் அசத்தல் நான்கு விக்கெட் இழப்புக்கு 338



வேதனையுடன் வெளியேறும் ஆஸி. அணித் தலைவர் பொண்டிங்...

புதுடில்லி, நவ.01

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி டில்லி கோட்லா மைதானத்தில் நடைபெற்றுவருகிறது. ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்று, முதல் இன்னிங்ஸில் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த அவுஸ்திரேலிய அணி தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஆஸி. அணியின் ஆரம்ப வீரர்களான மத்தியூ ஹைடன் 16 ஓட்டங்களுடனும், கடிச் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். தமது ஆட்டத்தைத் தொடர்ந்த இருவரும் இந்தியப் பந்துவீச்சாளர்களை அடித்து நொருக்கினர். இருவரும் தமக்கிடையே 123 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் தனது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்திருந்த கடிச் 64 ஓட்டங்களுடன் மிஸ்ராவின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹைடனுடன் ஜோடி சேர்ந்தார் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங். இருவரும் தமது அபார ஆட்டத்தினால் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இந்நிலையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹைடன் 83 ஓட்டங்களைப் பெற்று ஷேவாக்கின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த அணித் தலைவர் பொண்டிங்குடன் கூட்டுச் சேர்ந்துகொண்டார் மைக்கல் ஹஸி. அணியின் ஓட்ட எண்ணிக்கை 284 ஆக இருந்தபோது 87 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரிக்கி பொண்டிங்கை போல்ட் முறையில் ஆட்டமிழக்கச் செய்து வெளியேற்றினார் விரேந்தர் ஷேவாக்.

தொடர்ந்து ஹஸியுடன் இணைந்து கொண்டார் மைக்கல் கிளார்க். இருவரும் தமக்கிடையே 42 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது 53 ஓட்டங்களுடன் ஹஸி ஆட்டமிழந்தார். இவரையும் ஷேவாக் போல்ட் முறையில் ஆட்டமிழக்கச் செய்து பெவிலியன் திருப்பினார்.

பின்னர் களமிறங்கினார் வட்சன். நேற்றைய 3ஆம் நாள் ஆட்டம் முடிவடையும் போது அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 338 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிளார்க் 24 ஓட்டங்களுடனும், வட்சன் 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருக்கின்றனர். ஆட்டத்தின் 4ஆம் நாள் இன்றாகும்.




## கிரிக்கெட் துளிகள்...

* "டெண்டுல்கர் கிரிக்கெட் ஆட்டத்தில் ஜெண்டில்மேனாக திகழ்பவர் என்பதை நான் அவருடன் ஆடுகையில் பார்த்திருக்கிறேன். அவரைப் போன்று கிரிக்கெட்டில் அதிக ஈடுபாடு கொண்ட வீரர்களை நான் பார்த்ததில்லை. அவரிடம் இருந்து நான் நிறைய கற்றிருக்கிறேன். அவர் இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு முன்மாதிரி ஆவார். டெண்டுல்கர் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் தாராளமாக ஆடுவார். ஓய்வு குறித்து அவரது முடிவுக்கே விட வேண்டும்" என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், கிரிக்கெட் சபைத் தலைவருமான அர்ஜுனா ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

* "தற்போதைய கும்ப்ளே தலைமையிலான இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி மிகவும் சிறப்பானதாகும். இதுபோன்ற அணியை நான் பார்த்ததில்லை. இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை அருமையாக இருக்கிறது. இதேபோல் சுழற்பந்து வீச்சாளர்களும் தங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். அணியில் உள்ள அனைத்து வீரர்களும் நல்ல நிலையில் உள்ளனர்" என்று டில்லியில் நடைபெறும் 3-வது டெஸ்ட் போட்டியை நேரில் பார்த்த இந்திய அணியின் முன்னாள் தலைவர் அஜித் வடேகர் கூறியுள்ளார்.

* பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் இடக்கை சுழற்பந்து வீச்சாளர் அப்துர் ரசாக்கின் பந்து வீச்சில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நியூஸிலாந்து-பங்களாதேஷ் அணிகள் இடையேயான டெஸ்ட் போட்டித் தொடரில் அப்துர் ரசாக் பந்து வீச்சு முறையாக இல்லை என்று அந்தப் போட்டியின் நடுவர்களாக இருந்த டார்ல் ஹார்பர், அசோகா டிசில்வா ஆகியோர் ஐ.சி.சி.யிடம் புகார் தெரிவித்துள்ளனர். இதனால் அப்துர் ரசாக்குக்கு தடை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

* 206 ஓட்டங்கள் குவித்த கௌதம் கம்பீர், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்கள் குவித்த 'இடக்கை தொடக்க ஆட்டக்காரர்' என்ற புதிய சாதனையைப் படைத்தார். இதற்கு முன்பாக இங்கிலாந்தின் பாப் பார்பர் 1966ஆம் ஆண்டு சிட்னியில் நடந்த டெஸ்டில் 185 ஓட்டங்கள் எடுத்தமையே அதிகபட்சமாக இருந்தது.

* லஷ்மண்-கம்பீர் ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 278 ஓட்டங்கள் சேர்த்தது. இந்திய மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய இணை 4ஆவது விக்கெட்டுக்கு சேர்த்த அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். இதற்கு முன்பாக வெங்சர்க்கார்-விஸ்வநாதன் ஜோடி 1979-80ஆம் ஆண்டு பெங்களூரில் நடந்த டெஸ்டில் 159 ஓட்டங்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

* வி.வி.எஸ்.லஷ்மண் 123 ஓட்டங்கள் எடுத்த போது, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்டில் 2 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 17ஆவது வீரர் மற்றும் 2ஆவது இந்திய வீரர் என்ற சிறப்பை பெற்றார். ஏற்கனவே இந்திய வீரர் டெண்டுல்கர் (2,580 ஓட்டங்கள்) இந்தச் சாதனைப் பட்டியலில் உள்ளார்.

# ஆஸி. வீரரை மோதியமையால் கம்பீருக்கு ஒரு டெஸ்ட் தடை!

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வட்சனை தனது தோள்பட்டையால் மோதி தாக்கினார் என குற்றம் சாட்டப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நாக்பூரில் வரும் 6ஆம் திகதி தொடங்கும் 4ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியில் கம்பீர் இடம் பெற மாட்டார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் நடத்தை விதிகளை கௌதம் கம்பீர் மீறி விட்டார் எனவும், எனவே அவர் ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

நேற்றுக் காலை போட்டி தொடங்கும் முன் நடுவர் கிறிஸ் பிரோடை கௌதம் கம்பீர் சந்தித்தபோது இந்தத் தடை குறித்து அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் விதிகளின்படி வீரர்களுடன் உடல் ரீதியாக மோதுவது ஏற்கத்தக்கது அல்ல என்றும், கம்பீரின் நடவடிக்கை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் இரண்டாவது லெவல் விதிமுறைகளுக்கு புறம்பானது என்றும் கூறியுள்ள கிறிஸ் பிரோட் இதற்காகக் கம்பீருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

கௌதம் கம்பீருக்கு கடுமையான தண்டனை விதிக்க தாங்கள் திட்டமிட்டிருந்தனர் என்றும், ஆனால் கம்பீரை தூண்டும் வகையில் ஷேன் வட்சன் நடந்து கொண்டார் என நடுவர்கள் கருத்து தெரிவித்ததாலும் இதற்கு முன் இதுபோன்ற நடவடிக்கைகளில் கம்பீர் ஈடுபட்டதில்லை என்பதாலும் அவருக்கு குறைந்த தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரோட் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சனையில் கௌதம் கம்பீரை தூண்டும் வகையில் நடந்து கொண்டார் என எழுந்த புகாரின் பேரில் அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வட்சனுக்கு போட்டிக்கான ஊதியத்தில் 10 சதவீத அபராதம் நேற்று முன்தினம் விதிக்கப்பட்டது.

டில்லியில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதலாம் நாளில் பந்து வீசிய ஷேன் வட்சன், கம்பீரைத் தூண்டிவிடும் வகையில் நடந்து கொண்டதை தொடர்ந்து ஓட்டம் எடுக்க ஓடிய கம்பீர் ஷேன் வட்சன் மீது தனது கைகளை கொண்டு மோதியது குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. தரவரிசை 2ஆவது இடத்தில் குமார் சங்கக்கார



டுபாய், நவ. 01

டெஸ்ட் போட்டிகளுக்கான ஐ.சி.சி. துடுப்பாட்டத் தரவரிசைப் பட்டியலில், இலங்கை அணியின் குமார் சங்கக்கார 886 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

சந்தர்பால் (மே.இ.890) தொடர்ந்து முதலிடத்திலும், ஆஸி.வீரர் ஹஸி (881) 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில் இந்திய அணியின் விரேந்தர் ஷேவாக் (770) 10ஆவது இடத்திலும், லஷ்மண் (679) 16ஆவது இடத்திலும், டிராவிட் (670) 18ஆவ்து இடத்திலும், சச்சின் (661) 19ஆவது இடத்திலும் உள்ளனர்.

# உலக செஸ் சம்பியன் ஆனந்துக்கு இந்திய ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து!



சென்னை, நவ.01

உலக செஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற விஸ்வநாதன் ஆனந்துக்கு, ஜனாதிபதி பிரதீபா பட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதலமைச்சர் கருணாநிதி ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

சென்னையை சேர்ந்த 38 வயதான ஆனந்த் உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வெல்வது இது 3ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2000ஆம் ஆண்டில் ஈரான் தலைநகர் டெக்ரானில் நடந்த போட்டியிலும், 2007ஆம் ஆண்டில் மெக்சிகோவில் நடந்த போட்டியிலும் பட்டம் வென்றிருந்தார். அதோடு 3 விதமான போட்டிகளிலும் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். அதாவது நொக்-அவுட், ரவுண்ட் ரொபின் மற்றும் நேருக்கு நேர் ஆகிய 3 வகையான ஆட்டத்திலும் ஆனந்த் வெற்றிவாகை சூடி அசத்தியுள்ளார். சம்பியன் பட்டம் வென்ற ஆனந்துக்கு சுமார் 15 கோடி ரூபா பரிசாகக் கிடைத்தது.

சம்பியன் பட்டம் வென்ற ஆன்ந்துக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துக் குவிந்த வண்ணம் இருக்கிறது. சென்னை பெசன்ட் நகரில் வசித்துவரும் அவரது பெற்றோர்களான விஸ்வநாதன்-சுசீலா தம்பதிகளை உறவினர்கள் உட்பட பலரும் வாழ்த்தி வருகிறார்கள்.

உலக செஸ் சம்பியனான ஆனந்துக்கு, ஜனாதிபதி பிரதீபா பட்டீல் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், 'சவால் மிகுந்த செஸ் போட்டியில் ஆனந்த் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இத்தகைய நீண்ட கால வெற்றிப் பயணத்துக்கு அவரது அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் தான் காரணமாகும். அவர் வருங்காலங்களிலும் அதிக வெற்றிகளை குவிக்க வாழ்த்துக்கிறேன்' என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன்சிங் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், 'செஸ் போட்டியில் தனது உயர்வான திறன் மூலம் ஆனந்த் நாட்டுக்கு பெருமை சேர்த்து வருகிறார். அவரது அர்ப்பணிப்பு மற்றும் சீரான வெற்றி நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் நம்பிக்கை ஒளி அளிப்பதாக இருக்கிறது' என்று கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் கருணாநிதியும், ஆனந்தை பாராட்டியுள்ளார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த் 2000ஆம் ஆண்டிலும், 2007ஆம் ஆண்டிலும் உலக சதுரங்கச் சாம்பியன் பட்டத்தை வென்றிருந்தார். செஸ் அரங்கில் மீண்டும் பெருமை தேடித்தந்துள்ள விஸ்வநாதன் ஆனந்துக்கு, தமிழக முதலமைச்சர் கருணாநிதி தமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்' என்று கூறப்பட்டுள்ளது.

"இந்திய செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்தின் சாதனைகளை எதிர்கால இளைஞர்கள் முறியடிப்பது அவ்வளவு எளிதல்ல' என முன்னாள் உலகச் சம்பியன் ரஷ்யாவைச் சேர்ந்த காரி காஸ்பரோவ் கூறியுள்ளார்.

# உதைபந்தாட்ட நடுவர்களுக்கு பத்தேகனவில் பயிற்சி முகாம்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 'ஏ' தர நடுவர்களுக்கான சான்றிதழ் பெறத் தேவையான பயிற்சி முகாம் கொழும்பு பத்தேகனவில் அமைந்துள்ள தேசிய உதைபந்தாட்டப் பயிற்சி நிலையத்தில், ஒக்டோபர் 20ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 15ஆம் திகதி வரை நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் முதன்முறையாக நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமில், பயிற்றுனராக ஈரான் நாட்டைச் சேர்ந்த மொஹாசெஸ் [illegible] பணியாற்றுகிறார்.

இந்தப் பயிற்சி நெறிக்கு தேசிய ரீதியில் பி தர நடுவர்கள் 26 பேரும், பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய சார்க் நாடுகளில் இருந்து தலா இருவருமாக மொத்தம் 34 பேர் கலந்து கொள்கின்றனர்.

தேசிய ரீதயில் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 11 பேர் தமிழ், முஸ்லிம்கள் ஆவர். அவர்களின் விவரம் வருமாறு:

ஏ.சத்தியராஜ் (குருநாகல்), எம்.வடிவேல் (குருநாகல்), எஸ்.பத்மநாதன் (இலங்கை இராணுவம்), பி.முகுந்தன் (பருத்தித்துறை), பி.ஞானராஜா (மன்னார்), ஈ.பாலேந்திரா அன்ரனி (கொழும்பு), எம்.என்.பக்கீர் அலி (கொழும்பு), எம்.ஐ.எம்.இஸ்மாயில் (கொழும்பு), எம்.எஸ்.எம்.பாயிஸ் (கொழும்பு), எம்.ஆர்.எம்.ஜஸ்மின் (மன்னார்), எம்.எல்.அபுதாஹிர் (அம்பாறை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர் இடம்பெயர்ந்திருப்பின் நிவாரண உதவி

யாழ்ப்பாணம், நவ.1

உள்நாட்டில் இடம்பெயர்ந்துவசிக்கும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு, தொழில்அமைச்சு பொருள்கள் மற்றும் பண உதவியை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த உதவியை வழங்க வசதியாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் அல்லது வேறு இடங்களில் வசித்து வருகின்ற ஊழியர் சேமலாபநிதிய அங்கத்தவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்தவர்கள் யாழ்.மாவட்டதொழில்அலுவலகத்திலும் கிளிநொச்சியில் இடம்பெயர்ந்தவர்கள் கிளிநொச்சி தொழில் அலுவலகத்திலும் விவரங்களைப் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, இடம்பெயர்ந்த திகதி, ஊழியர் சேமலாப நிதி அங்கத்துவ இலக்கம், தே.அ.அட்டை இலக்கம், இடம் பெயர்ந்து வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணம் ஆகியவற்றை உடன் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் அதிஷ்டலாபச் சீட்டுப் பிரிவான 'சிரமவாசன' நிதியச் சபை இந்த உதவிகளை வழங்கவிருக்கின்றது. (அ-01)

## அவுஸ்திரேலியாவில் கவனயீர்ப்பு நிகழ்வு

வடக்கு - கிழக்கு தமிழர்களின் அவலங்களை வெளிப்படுத்தும் கவனயீர்ப்பு நிகழ்வு, இன்று பிற்பகல் 2 மணிக்கு அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில், பெடரேஷன் சதுக்கத்தில் நடைபெறவிருக்கின்றது.

அவுஸ்திரேலிய தமிழ் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## கொழும்பில் இன்று சமாதான ஊர்வலம்

கொழும்பு, நவ.1

இடதுசாரிக் கட்சிகளின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில் சமாதான ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறவிருக்கின்றன.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வெள்ளவத்தை மயூரபதி அம்மன் கோவிலுக்கு அருகிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் மாலை 4 மணியளவில் கிருலப்பனையில் முடிவடையும். பின்னர் அங்கு பொதுக் கூட்டம் ஒன்றும் நடை பெறும். இந்த ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் இடதுசாரி முன்னணி, நவ சமாஜக்கட்சி ஆகியவற்றின் பிரமுகர்க ளும் உறுப்பினர்களும் கலந்து கொள்ள விருக்கின்றனர். இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணவும் இதில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (சி)


**ஓடுகள் விற்பனைக்கு**

பாவித்த ஓடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஐயாத்துரை மர அரிவுகாலை,
தாவடி வடக்கு, கொக்குவில்.
தொ.பே: 0774079548

**COMPUTER EXPRESS**
NO 167, Kasthuriyar Rd.,
Jaffna.

நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ள எமது கிளை நிறுவனத்திற்கு MS Office, DTP தெரிந்தவர்கள் தேவை. தொலைபேசி இலக்கத்துடன் சுயவிவரக் கோவையினை 06.11.2008 இற்குமுன் அனுப்பிவைக்கவும்.

(வடமராட்சிப் பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)


## ஈழத்தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை உட்பட பெரம்பூர், வியாசர்பாடி, மயிலாப்பூர், அடையார், கோடம்பாக்கம், திருவொற்றியூர், திருவான்மியூர் உட்பட நகரின் பல பகுதிகளில் உள்ள மளிகை, காய்கறிக் கடைகள் அடைக்கப்பட்டன. ஒருசிலர் காலை வியாபாரத்தை முடித்த பின்னர் கடைகளை மூடிவிட்டனர்.

சென்னையில் மிகப் பெரிய காய்கறிச் சந்தையான கோயம்பேட்டில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிமுதல் காய்கறி, பழக்கடைகள் மூடப்பட்டன. கோயம்பேடு சந்தைக்கு வழக்கமாக சரக்குகள் ஏற்றிவரும் லொறிகள் நேற்று நிறுத்தப்பட்டன. வெளிமாநிலம், மாவட்டங்களில் இருந்து காய்கறிகள் கொண்டுவரப் படவில்லை.

பல்வேறு இடங்களிலிருந்து காய்கறிகள் வாங்க டெம்போ வான், மினி வான், ஓட்டோக்களில் கோயம் பேடுக்கு வழக்கமாக வரும் சுமார் ஆயிரம் வாகனங்களும் வராததால் சந்தை வெறிச் சோடிக் காணப்பட்டது.

கோயம்பேடு காய்கறிச் சந்தையின் பிர தான கதவு மூடப்பட்டு இருந்தது. பூக்கடை தவிர ஹோட்டல்கள், தேநீர்க்கடைகள், பல்பொருள் அங்காடி போன்றவையும் மூடப்பட்டன.

இதேபோல தாம்பரம், ஆவடி, ஆம்பத் தூர், திருநின்றவூர் உட்படப் பல்வேறு பகுதிகளில் செயற்படும் காய்கறிச் சந்தை வியாபாரிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தெரு வீதிகளில் திறந்திருந்த ஒரு சில சிறிய கடைகளில் காய்கறி விலை கடுமை யாக உயர்ந்திருந்தது.

காஞ்சிபுரம், திருவள்ளுவர், வேலூர் மாவட் டங்களிலும் கடைகள் அடைக்கப்பட்டன.

வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன், டவுன்டனில் உள்ள சில கடைகளை அடைக்க வற்புறுத்தினார் என வந்த புகா ரின் அடிப்படையில் கைதுசெய்யப்பட் டார். அவர் பேப்பேரி பொலிஸ் நிலையத் திற் குக் கொண்டுசெல்லப்பட்டார். பின்னர் சிறிது நேரத்தில் விடுவிக்கப்பட்டார். (சி)

## யாழ். ப.நோ.கூ.சங்கக் கிளைகளில்
# அத்தியாவசியப் பொருள்களின் விநியோகக் கட்டுப்பாடு இன்று தளர்வு

யாழ்ப்பாணம், நவ. 01

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்டு வரும் கோதுமை மா,சீனி, அரிசி போன்றவற்றின் விநியோகக் கட்டுப்பாடு இன்று தொடக்கம் தளர்க்கப் பட்டுள்ளதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகளில் முன்னர் பங்கீட்டு அட்டைகளுக்கு இந்தப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

தற்போது இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு நுகர்வோர் தமக்கு தேவையான பொருள்களை குறைந்தது 15 கிலோவுக்கு மேற்படாமல் பெற்றுக்கொள்ள முடியும்.

கோதுமை மா கிலோ 80 ரூபாவாகவும் அரிசி கிலோ 81 ரூபாவாகவும், 90 ரூபாவாகவும், சீனி கிலோ 85 ரூபாவாகவும் விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

இப் பொருள்களை சங்கத்தின் கிளைகளிலும் மற்றும் சங்க கூட்டுறவு நகர்க் கிளைகளிலும் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் - இப்படி அவர் தெரிவித்தார். (1-224)

## மாற்று ஆற்றல் உள்ளோர் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 01

விசேட கல்விப் பிரிவால் வலிகாமம் கல்வி வலய மாற்று ஆற்றல் உள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் வலயமட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

போட்டியில் கோட்ட மட்டத்தில் முதல்இரண்டு இடங்களையும் பெற்றவர்கள் பங்குபற்ற முடியும்.

நூலக விஞ்ஞான செயற்றிட்டம் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் போட்டி நிறைவடைந்ததும் மாற்று ஆற்றல் உள்ளோர் தினப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்று வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து இராசையா

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இராசையா நேற்று (31.10.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து- தையலம்மையின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு- ஐயாத்தப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கோபாலப்பிள்ளை, சிவக்கொழுந்து, இராசம்மா மற்றும் கணபதிப்பிள்ளை,காராளபிள்ளை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரசரத்தினம், மருதலிங்கம் காலஞ்சென்றவர்களான அருளானந்தமூர்த்தி, குணேஸ்வரி மற்றும் செல்வராணி, செல்வரத்தினம், விஜயலச்சுமி, மருதஐயனார், விக்னேஸ்வரன், ஸ்ரீஸ்கந்தராசா, யோகேஸ்வரி, கனகரத்தினம், நகுலேஸ்வரன், நகுலேஸ்வரி, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுசிலா, சறோஜினிதேவி, காஞ்சனாதேவி, கனகரத்தினம், ஆனந்தம், துரைரட்ணம், அம்பாளிகை, புனிதா, சுபாசினி, செல்வராசா, கனகாம்பிகை, மதிவதனா, காலஞ் சென்ற பரமேஸ்வரன் மற்றும் வணா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2008) சனிக்கிழமை இராமநாதபுரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.கண்ணன்
(சென்.ஜோன்ஸ் கல்லூரி),
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*311/1, பலாலி வீதி,*
*கோண்டாவில்.* (சி-55168)

### கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

யூனியனடி, உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் 31.10.2008 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- செல்லம்மா தம்பதியினரின் மகனும் முத்தம்மாவின்(கமலம்) அன்புக் கணவரும், தமயந்தி (லண்டன்), புஸ்பநிதி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயச்சந்திரன்(லண்டன்), புஸ்பராசா(சுவிஸ்)ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2008) சனிக்கிழமை பி.ப. 1மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

*யூனியனடி, உடுப்பிட்டி.*

### திருமதி செல்லம்மா செல்லையா (குஞ்சம்மா)



மருதடி மேற்கு, சாவச்சேரியைப் பிறப் பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா செல்லையா நேற்று (31.10.2008) வெள்ளிக் கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சிவக்கொழுந்துவின் மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தர்- சின்னாச்சியின் மருமகளும் கதிராசிப்பிள்ளை, வேலாயுதபிள்ளை (அமரர்), சுப்பிரமணியம், தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேஸ்வரி, ஈஸ்வரி, நாகேஸ்வரன், தர்மகுலசிங்கம் (அமரர்), வேலும் மயிலும் (அமரர்), தெய்வநாயகி, தனலட்சுமி, சுபா ஜினி, கேதீஸ்வரன், தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநாவுக்கரசு, தெய்வேந்திரன், நாகநந்தினி, ஏஞ்சலா, நவராஜ சேகரன், நந்தகுமார், கருணாகரன், மகாலஷ்மி ஆகியோரின் பாச மிகு மாமியாரும் உதயணன், பிரதீபன், உதயப்பிரியா, அமல ராஜன், சுஜீவா (அமரர்), சுஜேதன், சுஜீவன், சுகேதன், அர்ச்சனா, ஆர்த்திகா, விசானி, பொபின்சன், மிதுன், துஷாந்தி, ஜோஷ்வா, துஷ்யந்தி, லவசாந், லவனியா, துஷ்யந்தி, துஷ்யங்கி, துஷ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியும் கிஷோர், மீருதி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மேலதிக தொடர்புகளுக்கு:
0112360499

*No:2, 7/4,*
*47th lane,*
*Colombo - 6*


**COMPUTER EXPRESS** **நெல்லியடியிலும் நாம்......**

HEAD OFFICE:
No 167,
Kasthuriyar Rd,
Jaffna
Phone : 0212228250

BRANCH OFFICE:
No 07,
Kanpollai Lane,
Kodikamam Rd,
Nelliyadi.
Phone : 0777222422

வடமராட்சி மாணவர்களின் நலன்கருதி குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினை வழங்க எமது கிளை நிறுவனத்தினை
No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi.
05/11/2008 அன்று ஆரம்பிக்கவுள்ளோம்.

Computer Courses: 80%OFF

| | | | |
|---|---|---|---|
| DIPLOMA IN MICROSOFT OFFICE | 3Months | | 1,500 |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN WEB PAGE DESIGNING | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING | 4Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN AUTO CAD | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN ACCOUNTING PACKAGE | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 4Months | ~~10,750~~ | 2,150 |
| HONOURS DIP. IN COMPUTER SCIENCE | 5Months | ~~13,000~~ | 2,600 |

50%OFF Advance Courses,

| | | |
|---|---|---|
| Dip. in Multimedia | ~~5500~~ | 2750 |
| Dip. in Video Editing | ~~6500~~ | 3250 |
| Dip. in Networking | ~~10000~~ | 5000 |

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள்

நெல்லியடி கிளையில் 5ம் 6ம் 7ம் திகதிகளில் பதிவுசெய்யும் 100 மாணவர்களிற்கு குறிக்கப்பட்ட கட்டணத்தில் விசேடகழிவு வழங்கப்படும்.

யாழ்நகரில் வகுப்புக்கள் ஆரம்பம்

Batch I 02/11/2008 {11AM 02PM
Batch II 04/11/2008 09AM
Batch III 06/11/2008 09AM
Batch IV 08/11/2008 {11AM 02PM

10/11/2008 இன்று நெல்லியடியில் வகுப்புக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் துயரம் கண்டு தமிழக அரசு வழங்கும் உதவிகளை நாம் வரவேற்கின்றோம்

## இரா.சம்பந்தன் பி.பி.ஸிக்குப் பேட்டி

கொழும்பு, நவ. 01

''வன்னிப் பகுதியில் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற நிலையை உணர்ந்து, தமிழர்கள் - சகோதரர்கள் என்ற வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் எனத் தீர்மானித்து, அந்தச் சேவையை ஆற்றுவதற்கு தமிழக அரசு முன் வந்திருக்கிறது. அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்கின்றோம்.''

-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசு காலாகாலமாக நாங்கள் பொதுமக்களைத் தாக்கவில்லை, நாங்கள் அவர்களைக் கவனிக்கின்றோம். அவர்களுக்கு எவ்விதமான குறைகளும் இல்லை என்றே கூறிவந்தது.

அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் இந்த விடயத்தில் மத்திய அரசு தலையிட வேண்டிய தேவை வந்தது.

கொழும்பிலிருந்து ஜனாதிபதியின் ஆலோசகர், டில்லிக்குச் சென்று மிகக் கவனமாக நடப்போம், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவிதத்தில் நடந்துகொள்வோம் என்று வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றார். ஆனால் தற்போது பரந்தன், புதுக்குடியிருப்பு, முல்லைத் தீவு ஆகிய பகுதிகளில் விமானப் படையினர் குண்டுத் தாக்குதல்களை நடத்தி பொதுமக்களைப் பாதிப்படையச் செய்திருக்கின்றனர் என்று நாங்கள் அறிகின்றோம்.

தமிழக அரசு, வன்னி மக்களுக்கு நிதி திரட்டி உணவுப் பொருள்களை அனுப்பும் நடவடிக்கையை நாங்கள் பாராட்டுகின்றோம் - என்றார். (சி)

# முகமாலை, எழுதுமட்டுவாள் பகுதிகளில் வியாழனன்று புலிகள்- படையினர் மோதல்

கொழும்பு, நவ. 01

முகமாலை, எழுதுமட்டுவாள், வேம்பெடுகேணி ஆகிய முன்னரங்க நிலைகளில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆங்காங்கே சிறு மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

பாதுகாப்பு அமைச்சு ஊடகத் தகவல் நிலையம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

படையினர் முன்னரங்க நிலைகளில் நடவடிக்கைகளை மேற் கொண்ட போது அந்தப்பகுதியில் சிறு குழுக்களாக நின்ற விடுதலைப்புலிகளுடன் மோதல்களில் ஈடுபட்டனர். பூநகரியிலிருந்து எழுதுமட்டுவாள் நோக்கி ஷெல்தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டனர் என்றும் ஊடக - நிலையம் தெரிவித்தது. (அ-01)

# அடுத்த ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் சுற்றுலாத்துறை கவனத்தில் கொள்ளப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 01

''2009 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது'' - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முதலீடு, சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடம் 73 கோடியே 40 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இலங்கையின் முதலீட்டு இலக்கை அடையக்கூடியதாக இருந்தது. கடந்த 6 மாத காலத்தில் மட்டும் 42 கோடியே 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள் கைத்தொழில் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக முதலீடு செய்யப்பட்டது.

அடுத்த வரவு - செலவுத்திட்டத்தில் கைத்தொழில்துறை உட்கட்டமைப்புப் பணிகளுக்காகவும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# தனியார் தொலைக்காட்சிகளை அடக்கி அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரச் சதி!

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 01

தனியார் தொலைக்காட்சி நிலையங்களை அடக்கி ஒடுக்கி அவற்றை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அரசு சதி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதற்கமைய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிட்டுள்ளதாகவும் ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மங்கள சமரவீர தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு ஆகிய கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்த நடவடிக்கைக்கு எதிராகக் கடுமையான அரசியல் நடவடிக்கையில் இறங்கப் போகின்றன என்று அக்கட்சிகள் எச்சரித்துள்ளன.

இது தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர ஆகியோர் ஒன்றிணைந்து கொழும்பில் நடத்தினர்.

அங்கு முதலில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியவை வருமாறு:-

ஊடக அடக்குமுறையை மேற்கொண்டுவரும் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இந்த அடக்குமுறையை மேலும் பலப்படுத்தும் நோக்கில் புதிய ஊடகக் கொள்கை ஒன்றை வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக வெளியிட்டிருக்கின்றது. குறிப்பாகத் தனியார் தொலைக்காட்சி நிலையங்களைப் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே இந்த வர்த்தமானி அறிவித்தலின் நோக்கம்.

இந்த வர்த்தமானி நடைமுறைக்கு வந்தால் சுதந்திர ஊடகங்கள் அழிந்துபோய் விடும்.

**வெளிநாட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உள்நாட்டில் காண்பிக்க முடியாது**

அத்தோடு வெளிநாட்டுத் தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளை உள்ளூர் தொலைக்காட்சிகளில் காண்பிக்க முடியாது என்றும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி பி.பி.ஸி. மற்றும் சி.என்.என். போன்ற தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளை இங்கு ஒளிபரப்ப முடியாமல் போய்விடும்.

ஆகவே, இந்த ஊடக அடக்குமுறையை நாம் ஏற்கமாட்டோம். இது நடைமுறைக்கு வருவதைத் தடுப்பதற்காக அனைத்துவிதமான அரசியல் போராட்டங்களையும் நாம் முன்னெடுப்போம் - என்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூவ் ஹக்கீம் கூறியவை வருமாறு:-

ஊடகங்களை மிரட்டி அடிபணியவைக்கும் திட்டத்துடன் அரசு செயற்பட்டு வருகிறது.

இதன் ஒரு கட்டமாகத்தான் இப்போது புதிய ஊடகக் கொள்கை ஒன்று அரசால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மக்களிடம் பிரபல்யம் பெற்றுத் திகழும் தனியார் தொலைக்காட்சிகளைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதே இந்தப் புதிய கொள்கையின் நோக்கம். இதற்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். - என்றார். (சி)

### கடற்புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

ஜெயந்தி நகரில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி 'ஜெற்' விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு வீடுகள் அழிந்துள்ளன; ஏழு வீடுகள் சேதமடைந்தன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது ஜெயந்திநகர் மற்றும் கிளிநொச்சி நகரில் இருந்து மக்கள் சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோரை பொதுமக்கள் வந்து பார்வையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நடிகர், நடிகைகள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

இப்போராட்டத்தில் கலந்துகொள்வோர் தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பேசவேண்டுமே தவிர, சட்டத்திற்குப் புறம்பான எதையும் பேசக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, போராட்டத்தில் கலந்துகொள்ளும் நடிகர், நடிகைகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்றும் சரத்குமார் கேட்டுக்கொண்டுள்ளார். (சி)

### திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு உட்படுத்தப்பட்டன. சம்பூர், மூதூர் மற்றும் அவற்றை அண்டிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களே இந்த நலன்புரி நிலையங்களில் அதிக எண்ணிக்கையில் தங்கி உள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஏழு தமிழர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் உறவினர்கள் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கத்திடம் கோரியுள்ளனர். (அ-1)

### பிள்ளையானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரணி ஒன்று பிள்ளையான் மற்றும் அவரது மெய்க்காவலர்கள், சகாக்களை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து தம்புள்ள நோக்கி அதிவேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அப்போது எதிரே வந்துகொண்டிருந்த மீன் லொறி ஒன்றை - வந்த வேகத்திலேயே கடந்து செல்வதற்குப் பிள்ளையானின் வாகனங் கள் முயன்றன என்றும் - அந்த நேரத்தில் குறித்த மீன் லொறியுடன் மோதி விபத்து ஏற்பட்டதாக வும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் பிள்ளையான் காயங்கள் இன்றி மயிரிழையில் தப்பித்துக் கொண்டார். அவரது சாரதியும் மெய்க்காவலர் ஒருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-சி)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் 10 மணிமுதல் படை யினர் ஆட்டிலெறி ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஷெல்கள் விழுந்து வெடித்ததில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் மக்களின் வீடுகள் இரண்டு சேதமாகியுள்ளன.

முல்லைத்தீவு, செம்மலை மக்கள் குடியிருப்புக்கள் மீதும் படையினர் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர். மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து மணலாற்றில் இருந்தும் படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர். அதனால் கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளன. ஷெல் தாக்குதலில் பத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமாகின.

### படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனையின் மருந்து தெளிக்கும் பணியாளரான லிங்கேஸ்வரன் என்பவரே படுகாயமடைந்தார்.

கண்டாவளை, ஆழியவளைப் பகுதிகளில் மலேரியா தடுப்பு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த குழுவினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. (அ-சி)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் சிறியரக விமானங்கள் உலகத்தில் பூச்சிகொல்லி தெளிப்பதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான விமானங்களில் ஒன்றை விமானப் படையினர் ஒரு மாதத்திற்கு முன்னர் தாக் கியழித்துள்ளனர். எதிரியின் தந்திரோபாயங்களை எதிர்பார்த்திருக்க முடியாது என்பதனால் தான் படிப்பதற்காகவும் வாசிப்பதற்காகவும் கொடுக்கப்பட்ட புத்தகங்களுக்குள் குண்டுகளை பொருத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில் எதிரியின் ஏனைய விமானங்களை தாக்கியழிப்பதற்கான வெற்றிகர்மான தந்திரோபாயங்களை பாதுகாப்புத் தரப்பினர் கையாள்கின்றனர். அந்த தந்திரோபாயங்கள் மீது நம்பிக்கை இருக்கின்றது.

தரையில் இருக்கின்ற படையினர் அன்று மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாகவே கடந்த செவ்வாய்க்கிழமை புலிகள் தமது இலக்கை மாற்றிக் கொண்டனர். அது பாரிய வெற்றியாகும். எதிர்காலத்தில் புலிகளின் பூச்சி கொல்லி விமானமும் தாக்கியழிக்கப்படும். பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக சகலரும் ஒத்துழைக்க வேண்டும். அதைவிடுத்து கோப்பிக்கடை பேச்சுக்கெல்லாம் அரசாங்கத்தினால் பதிலளித்துக் கொண்டிருக்க முடியாது - என்றார் அமைச்சர். (அ-01)


கற்சுமி வெளியீடு
தரம் 1-5 வரையான மாணவர்களுக்குரிய ஒக்ரோபர்- நவம்பர் மாத இதழ்கள்.
அம்மா அன்னை தாய் அறிவு தேடல்
வெளிவந்து விட்டன
உங்கள் பிள்ளைகளின் ஆற்றலை மேம்படுத்தும்.
கற்சுமி, 166, நாவலர் வீதி, யாழ்.

Microsoft Certified Systems Engineer-USA
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 03.11.2008 08.00 a.m
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
MCS Supported By UNDP/RRP

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
CHEMISTRY
DAY CLASS
முழு அலகு உள்ளடங்களான MODEL PAPERS
Sat, Sun - 8- 9.30am
ORGANIC மீட்டல்
Mon, Tue, Thu 2.30-4.00
By:- DIAS Bsc (Hons) Spl- in- Chem

WANTED ACCOUNTS TRAINEES
G. C. E A/L (COM) WITH PART QUALIFICATION IN AAT / HNDA
Apply before 7th of November
C/O uthayan
Kasthuriyar Rd, Jaffna.

நிலா
3ஆம் தவணைப் பரீட்சை
தரம் 04 முதல் 11 வரை வினாத்தாள் தேவையானோர்தொடர்பு கொள்ளவும்.
(நிறுவனங்களுக்கு கழிவு வழங்கப்படும்)
N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
T.P : 0776241573

SHAMROCK
சுச்ரமோட்டை, யாழ்.
இணைந்த கணிதம்
2009 - எளிமை இசை இயக்கம், சார்பு வேகம்
Sat, Sun 4 - 6 p.m
Mr.K.K.கஜன் B.Sc
2010 - நாடகம் J.ஜோனன் B.A.
அரசியல் T.கஜன்
இந்து நாகரீகம் S.கார்த்திக்

Com.Maths
A/L 2010
எல்லைகள், வகையிடு
Sat, Sun - 1- 2 pm
ஆரம்பம்:- 01.11.2008 (இன்று)
S.Jude
NEC

LOGIC
Paper Class
Sat, Sun - 12- 1 pm
ஆரம்பம்:- 01.11.2008 (இன்று)
P.கமல்
NEC


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org